ஸ்ரீ பரகாலர் திருவைபவமாலையும்

அந்தாதியும்

C

Q22:417
N27

85594

443

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

[illegible]

# ஸ்ரீ பரகாலர்

## திருவைபவ மாலையும், அந்தாதியும்,

இயற்றியவர்

ஸ்ரீமதித்யாதி பொன்னேரி ஆயர்பாடி
ஸ்ரீ உ. வே. வேங்கடசாரி ஸ்வாமிகள் திருவடி சம்பந்தியும்
சென்னை ஸன்மார்க்க மத ப்ரவசகருமாகிய
ஸ்ரீமாந். நா. சி. கண்ணபிரான் முதலியாரவர்களால்

சென்னை
அமெரிக்கன் டைமெண்ட் பிரஸில்
அச்சிடப்பட்டது.

Registered Copy-Right.

1927. [அணா 8.

... THE REGISTRAR OF BOOKS
16 JAN 1928
MADRAS

Q22:417
N27
85594

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

2782
894·811

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 JAN 1928
MADRAS

த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ।
ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே ।
தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி ।
அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி ॥

# ஸ்ரீபரகாலர்

## திருவைபவ மாலையும், அந்தாதியும்.

இயற்றியவர்

ஸ்ரீமதித்யாதி பொன்னேரி ஆயர்பாடி
ஸ்ரீ உ. வே. வேங்கடசாரி ஸ்வாமிகள் திருவடி சம்பந்தியும்

சென்னை ஸன்மார்க்க மத ப்ரவசகருமாகிய
ஸ்ரீமாந். நா. சி. கண்ணபிரான் முதலியாரவர்களால்

சென்னை
அமெரிக்கன் டைமேண்ட் பிரஸில்
அச்சிடப்பட்டது.

இதன் விலை] 1927. [அணா 8.

இந்நூல் அச்சுவாகனமேறி வெளிவரப் பொருளுதவி புரிந்த
தயாள சிந்தையராகிய ஸ்ரீமான்கள்

**தஞ்சை ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதிஇராஜகோபாலஏகாங்கிஸ்வாமிகள்**
திருவடி சம்பந்தரும்,

கோலார் தங்க வயல் ஸ்ரீ ஆண்டாள் சந்நிதி தலைவரும்,

ஸ்ரீஎதிகிரி திருநாராயணபுரம் பகவத் ததீயாராதன இராமாநுஜகூட
ஸ்தாபகருமாகிய ஸ்ரீமாந் க. பூசாமி பிள்ளை என்கிற
பூமி நாயகராமாநுஜ தாஸரவர்கள்,

ஸ்ரீபரமஹம்ஸேத்யாதி கப்பியாமூர் மதுரமங்கலம்
எம்பார் ஜீயர் ஸ்வாமிகள் ஞான புத்திரரும்,

ஸ்ரீமத் அருள்மாரி ஏகாங்கி ஸ்வாமிகள் திருவடி சம்பந்தரும்,

கோலார் தங்க வயல் கண்டிராக்டரும் ஆகிய ஸ்ரீ ஆண்டாள் சபை.
**பிள்ளை வானமாமலை ராமாநுஜ தாஸரவர்கள்.**

Q23:417
N27
85594

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீபாஷ்யகாரர் தேவஸ்தானம் தருமகர்த்தர்

## வித்வான் ஆசூரி. உ. வே. இராமாநுஜாசார்ய சுவாமி

## திருவுள்ளகருத்து.

[illegible]

ஸ்ரீ. ஆ. ராமாநுஜாசார்ய:

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# சிறப்புப்பாயிரம்.

சென்னை, இராயப்பேட்டை

வெஸ்லி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் சிந்தாமணி

ஸ்ரீமத். உ. வே. கோபாலாச்சாரியரவர்கள் இயற்றிய

எழுசீராசிரிய விருத்தம்.

---

(1) பொன்னுலாங் கமல வாவிசூழ் பொழிலிற்
புதுநற வருந்திய சுரும்பர்
இன்னிசை மிழற்ற நீர்வள னுடனே
யெழினில வளநிறைந் தோங்கும்
பொன்னேரி யென்னுந் திருத்தலந் தன்னைப்
பொருந்துறு நாயிறென் பதியில்
இன்புற நிலவும் வைணவப் புனிதன்
இணையில்சாண் டில்யகோத் திரத்தோன்.

(2) வாய்மையில் மாறாச் சீர்த்திசால் வேளாண்
மரபினுக் கணியெனத் திகழ்வோன்
தூய்மைசே ருளத்தோ னுயிர மென்னத்
துலங்குநன் னைமமுற் றுயர்ந்தோன்
சேய்மையிற் றூனே தொண்டரைக் காணிற்
செந்தழன் மெழுகென வுருகி
நேய்மையோ டழைத்து வந்துப சரிக்கும்
நிகரிலாத் தந்தைசெய் தவத்தின்.

(3) பயனெலாந் திரண்டோர் வடிவென வுதித்த
பாக்கிய நிறைகுணச் செல்வன்
புயலெலாந் திரண்டு கன்மழை பொழியப்
புரிவுட னனிரை காத்து
நயனெலா முல்லை நிலத்தவர்க் களித்த
நாயக னிணையடி மலரை
இயலுடன் பரவி வழிபடுந் தொண்ட
னியற்றமி ழுடன்வட கலையும்.

(4) துரிசிலா நல்லா சிரியர்பா லுணர்ந்தே
தோன்றவற் றுயர்நெறி யுறைவோன்
பரிபுர மணிந்த பதாம்புயக் கமலை
பார்மக டமக்கருந் தலைவன்
உரியநா மத்துட் கண்ணபி ரானென்
றோதுநன் னுமமார் வள்ளல்
விரிவுறு விசிட்டாத் வைதவே தாந்த
வியன்சித்தாந் தங்களுட் பொருளை.

(5) எதிருப காரந் தன்னமுங் கருதா
தெழிலிநன் னீர்பொழி தகைபோல்
மதியுறப் பலர்க்கு முபநியா சங்கள்
வகையுடன் புரிதருந் திறத்தால்
விதியறி யாத பரசம யங்கள்
விம்மியே தோல்வியுற் றேங்கத்
துதிபெறு தனது பெயர்தனக் கியையத்
துளவநற் றாரினன் புகழை.

(6) எத்திசை களினும் புகழ்ந்துசொல் புலவன்
ஏதமில் தாய்வருக் கத்தில்
சித்திசேர் வான மாமலை மடத்தில்
திகழ்பர சமயகோ ளரியென்
றொத்துசொல் லரிய பட்டமொன் றந்நா
ளோதுமம் மடத்ததி பதியால்
வித்தக முறவே யளித்திடப் பெற்ற
மிளிர்முடிச் சூரப்பா ரியன்றன்

(7) மரபினி லுதித்த வுத்தமக் கலைஞன்
மாண்புசேர் திருமங்கை மன்னன்
பரவல ராகுங் கரிகளை யடக்கும்
பகரரு ஞானநற் சீயம்
புரவருண் மாரி பரகால னெனவே
புனிதபற் பலதிரு நாமம்
விரிவுறப் பூண்ட தூயவன் றன்மேல்
வியன்பா காலரந் தாதி.

(8) என்னுமோ ரரிய பிரபந்த மதனை
யினியமுக் கனிச்சுவை தானும்
என்னிதற் கெனவே முத்தமிழ்ப் புலவ
ரியலிறும் பூதுபெற் றிசைக்க
தன்னிக ரில்லா ஞகுமக் கலியன்
றன் றிரு வழகினிற் குழைந்தே
மன்னிய நூறு கலித்துறை தம்மால்
மகிழ்வுட னியற்றின னம்மா.

(9) திரைகட லுடுத்த பூவுல கதனிற்
றிகழ்தரு முயிரெலா முய்ய
நிரைதரு புகழ்சேர் திருமங்கை மன்ன
னேரிலாத் திருவடிக் கன்பாங்
குரைதனக் கடங்கா விதமென வுய்க்க
உஞற்றுமந் நூனிதம் வாழி
புரையிலா வந்நா லியற்றிய சீரார்
புண்ணிய னலனுடன் வாழி.

---

கோமளேசுவரன்பேட்டை, வித்வான்

ஸ்ரீமதித்யாதி ம. இராஜகோபால பிள்ளை

அவர்கள் இயற்றிய

விருத்தம்.

அண்ணலெனும் பரகால ரந்தாதி யொன்றுடனே
எண்ணுமவர் வடிவழகி லீடுபா டொன்றளித்தான்
வண்ணவழி சாவளியில் வந்தபெருஞ் சீர்க்குரிப
கண்ணபிரான் காசினியோர் கண்டுநலங் காணவரோ,

---

நத்தப்பட்டு வித்வான்

ஸ்ரீமான், வ. முத்துகிருஷ்ண ரெட்டியாரவர்களியற்றிய

வெண்பா.

பரகாலன் றன்சரிதம் பாரோ ருணர
உரத்தான் விரித்துரைத்தா னோங்கும்-கருத்தாற்கு
உண்ணமுத மாய்த்திகழ ஒப்பற்ற சீர்த்தியுளான்
கண்ணபிரா னுமேலோன் காண்.

---

சி. த. ஆ. சுப்பிரமணிய பண்டிதர் குமாரர்

ஸ்ரீமான், சி. த. முத்தையா பிள்ளையவர்கள் இயற்றிய

வெண்பா.

கலியன் கழற்கே கலித்துறையந் தாதி
மலியன்பிற் கண்ணபிரான் மன்னிப்—பொலிவுறுநற்
செந்தமிழாற் சொற்றான் சிறந்த வயிணவசம்
பந்தமெலா மந்தமுறப் பார்.

---

சென்னை பச்சையப்பன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்

ஸ்ரீமான் ஆ. வீ. கன்னைய நாயுடு அவர்கள் இயற்றிய

கட்டளைக் கலித்துறை

திருவாழ் நிறத்தன் திகழ்சீர் விரிக்குந்தெய் வக்கவிஞன்
திருவாலி வந்த பரகாலன் மேலொரந் தாதிசெய்தான்
கருவார் பிறவிக் குழிநீத் துயிர்கள் கதியுறநல்
லுருவார்ந்த கண்ண பிரானெனு முத்தம னெண்ணுதலே.

---

### விஷ்ணுபாத சேகர ரென்னும் வித்துவான்,

## ஸ்ரீமான் ஜா. பசுபதி நாயகரவர்கள் இயற்றிய

### கட்டளைக் கலித்துறை.

தருமங்கை நீண்டகங் கண்ணபி ரான்செந் தமிழ்மொழியால்
திருமங்கை மேவுரத் தெந்தைதன் பாலவன் தெள்ளடியர்
தருமங்கை வந்துறப் பொன்பறித் தேமறை தன்னையுங்கொள்
திருமங்கை மன்னற்கொ ரந்தாதி நன்கிங்குச் செப்பினனே.

விரகா லனேகரைத் தம்மதப் பள்ளத்தில் வீழ்த்ததெற்கேய்
ஒருகாலன் போல்வரும் பாதிரி மார்மத மோய்வதற்கின்
கிருகாலன் போலுமக் கண்ணபிரான்மே லியம்புமந்தப்
பரகாலன் மெய்ப்புகழ்க் கட்டியப் பாக்களும் பாடினனே.

---

### பச்சையப்பன் காலேஜ் ஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

## ஸ்ரீமான் கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்கள் இயற்றிய

### நிலைமண்டில ஆசிரியப்பா.

சீர்கெழு புலத்துச் செவ்விய ராகும்
தார்கெழு வென்றிச் சான்றோ ருறைதரும்
இடமென் றௌவை யியம்பிய மாண்பியல்
தடமுறு பல்பொழில் தம்புடைப் பொலிதர
ஐந்தரு நீழலி னமைந்தோர் வியப்புறுங்
கொந்தார் நறுமலர் குலவுறு தருக்களும்
பன்னிற மலர்களை வரன்றிப் பன்மணித்
தொகையா னமைந்த தொங்கலி னிழிதரும்
அருவிகள் பலவு மகந்தழீஇத் திகழும்
வேங்கட முதலா விளங்குறு பல்வரை
ஆன்றோர் காட்சியி னமைந்தினி திலகுறச்
சொற்பா லனையவர் கற்பா ரகத்தினர்
இற்பான் மங்கையர் பொற்பார் மலர்முகம்
விருந்தினர் தமக்கு மருந்தென மகிழ்செயுந்
தொண்டைமண் டலமென் தொல்புகழ் மண்டலர்

தனக்கணி யிவரெனத் தகைமையிற் பொலிபவர்
தாளாண் மையினர் வேளாண் மையினர்
துளுவ வேளாண் டொல்புகழ் மரபினர்
அன்னவர் தங்க ளருங்குலக் கடலிடை
மன்னிய கலைநிறை மதியெனத் தோன்றித்
தண்டுள வோனடி தாங்கிய வுளத்தினர்
துங்கவண் புகழாற் றுலங்கிய நற்சிவ
சங்கர முதலியின் றவமென வந்த
முத்துச் சாமிமான் முதுதவத் துதித்து
மாயிரும் புலத்தோர் மதித்திட விளங்கிய
ஆயிர முதலியென் றறைதரு சீர்த்தி
வாய்ந்தநல் லறிஞனு மாமதிக் கதிர்களின்
பல்புகழ் பரப்பிய பன்னருஞ் சிறப்பின்
அப்பாவு முதலி யாரெனு மறிஞர்தம்
மரபினிற் றோன்றிய மாண்புறு குணஞ்சார்
உண்ணா முலையெனு முயர்புலச் செல்வியும்
செய்தநற் றவமெனச் செழும்புவி தோன்றினேன்
கற்றோ ருவக்குங் கல்வியன் பொறையன்
கிறித்தவர் பல்லோர் கிளர்தரு சூழ்ச்சிகள்
பற்பல புரிந்து பற்றற நந்தம்
மக்களைத் தம்வய மாக்குபு மயக்கிய
காலந் தன்னிற் கதித்துறு மிருட்டொகை
தொலைந்திடத் தோன்றுந் தோய்கதிர்ப் பரிதியின்
புவியிடைத் தோன்றிப் புலமிக் கவரும்
வியப்புறு வண்ணம் வீறுறு தன்னு
வன்மையி னவர்தம் வன்செய லொழித்தோன்
அன்புட ஞற்பா ஞண்டுக ளாக
இந்து மதத்தி னியலெலா மவனியில்
விளங்குறச் செய்திடும் வியன்றவச் செயலினன்
மாயிரும் பொழில்சூழ் ஞாயிறென் பதியினன்
கருணையங் கடலினைக் கமலையின் கொழுநனை
வான்முகி னிறத்தனை மலர்மக ளுரத்தனை
ஈடு மெடுப்புமில் லிறைவனை மறையனை
என்று மறவா வெழிற்பெரும் புந்தியன்

கண்ண பிரானெனுங் கருதெழிற் புகழினன்
திண்டோள் வயவர் திகழ்நாற் கவிஞர்
மாமகள் கொழுநன் மலரடிக் கன்புசெய்
வைணவக் குலத்து மாண்பெருங் குரவர்
பதின்மரி லொருவர் பரகால ரென்னும்
நாவீ றுடையார் நளிர்மலர்க் கழல்கட்
கந்தாதி யென்றுரை யலங்க லொன்றையும்
மாசில் கட்டியமென் மாலை யொன்றையும்
நன்மணிக் கலம்பல நண்ணுபொற் பேழையின்
சொல்லுநற் பொருள்பல தோய்ந்தன திகழ்ந்திடப்
புனைந்து சாத்தினன் புலவர்க ளுள்ளீர்
அணிமிகு மிந்நூ லருஞ்சுவை கொண்மின்
மணமலர் நறைகொளும் வண்டரி னினிதே.

சென்னைச் சருவ கலாசாலை பி. ஏ. பட்ட பரீக்ஷைக்கும் பிற பரீக்ஷைகட்கும் பாட புத்தகமா யமைக்கப்பட்டிருந்த ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய சரித்திரம் முதலிய பிரசித்திபெற்ற நூல்களின் ஆசிரியரும், முன் ஜஸ்டிஸ் ஆபீஸில் திராவிடன் தினசரிப் பத்திரிகையின் தலைமைப் பத்திரிகாசிரியரா யிருந்தவரும், இப்போது சென்னையின் கண்ணுள்ள முதற்றரக் கலாசாலையாகிய "லயோலா காலேஜில்" "லெக்சரர்" என்கின்ற தலைமைத் தமிழ்ப் போதகாசிரியராயிருப்பவருமாகிய

## T. பக்தவத்ஸலம், பி. ஏ. எழுதியது.

எனது நண்பர் ஸ்ரீமான் நா. சி. கண்ணபிரான் முதலியாரவர்கள் இயற்றிய "பரகாலரந்தாதி" என்னும் அரிய நூலைக் கண்ணுற்றுக் களிமிக வெய்தினேன். நான் பார்த்த அளவில் இச்சிறந்த நூல் சொற்சுவை பொருட்சுவை அமைந்து விளங்குகின்றதென்றே சொல்லலாம். சென்ற ஐம்பதாண்டுகளாக ஸ்ரீமான் முதலியாரவர்களைச் சென்னையி லறியாதார் ஒருவருமேயிலர். நமது உட்சமயத்திற்காக இப்பெரியார் உழைத்து வந்தது எல்லோராலும் பாராட்டப்படுவதாகும். மேனாட்டுப் பக்கங்களில் இவரைப்போலொருவர் பாடுபட்டிருப்பாராயின், அவர் ஞாபகார்த்தமாக உருவச்சிலை யொன்று அமைக்கப்பட்டிருக்குமென்பது திண்ணம். முதலியாரவர்கள் இன்னும் நெடுநாள் நிலவுலகின் வாழ்க்கையிற் பொருந்தி நம்மனோர்க்கு ஓர் அரிய கலங்கரை விளக்கமாய்த்தோன்றி விளங்குவாரென்பது எனது கோரிக்கை.

T. பக்தவத்ஸலம், பி. ஏ.

# A
# FOREWORD

BY

## Mr. T. K. PARTHASARADY MUDALIAR

*who is well known to the readers of Newspapers*
*as* "**T. K. P.**" *for the last 40 years.*

---

Sriman N. C. Kannabiran Mudaliar, who is well known throughout the length and breadth of Southern India, as a renowned Hindu Missionary, deserves to be heartily congratulated on the success that has attended his efforts in producing "**Parakala Anthathi**" in the form of versifications. The recitation of the same ennobles the mind and elevates the feelings. The unique way in which they kindle devotional feelings is so charming as to be almost indescribable.

I am glad to be able to state that the labour expended on the work and the learning exhibited reflect great credit upon the Author. I have no doubt that the work will be received by the religious folks in different parts of India and get its due meed of recognition it certainly deserves.

I have known Sriman Kannabiran Mudaliar for well-nigh 40 years. Had it not been for his zeal and eloquent speeches at various places for the cause of Hinduism, many of the Adi-Dravidas and others would have fallen an easy prey to the conversions of the Christian Missionaries. I have known that he had also reconverted a few of the victims to the Christian Missionary proselytism and brought them back to the fold of Hinduism. There are several other things which he had done in his capacity as a Hindu Missionary besides the ones noticed above. But space would fail if I were to ennumerate them all. I have therefore to conclude these few words by invoking the blessings of my Lord Govinda on the author's life and activities.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## இந்நூலாசிரியரின்

# வமிசாவளிப் பிரபாவம்.

நல்லமண முள்ளதொன்றை நண்ணி யிருப்பதற்கு
நல்லமண முண்டாம் நயமதுபோல் — நல்ல
குணமுடையோர் தங்களுடன் கூடியிருப் பார்க்குக்
குணமதுவே யாஞ்சேர்த்தி கொண்டு.

(உபதேசரத்தினமாலை.)

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. திருக்குறள்.

கோலப் பெருங்கடலாகிய நீலப்பட்டாடையை யுடுத்து, நறுமை பயக்கும் பொறுமையை ஆபரணமாகப் பூண்டு விளங்கும் நிலமகளுக்குச் சிரோரத்தினமாகச் சிறந்துள்ளது செங்கற்பட்டு ஜில்லா. அதற்குத் திவளும் வெண்மதியெனத் திகழ்தருந் திருமுகம் போல்வது **பொன்னேரி** தாலூக்கா. இத்தாலுக்காவிற்குச் சிந்தூரத் திலகம் போன்று நடுநாயகமாயுள்ள **நாயிறு** என்னும் கிராமத்தில், **ஆயிரம்** என்னுங் கிரகத் திருநாமங்கொண்டு, பிரபல்ய எதீஸ்வர ராய சாண்டில்ய மகரிஷியின் கோத்திரோற் பத்திரராய்ப் புழல்கோட்டமரபில் புகழுடன் தோன்றிய **மெய்ஞ்ஞான முதலியா** ரென்பா ரொருவர் இருந்தார். இவர் கல்வி கேள்விகளில் வல்லவர்; சைவத் திருமரபைச் சார்ந்தவர்; தருமகுண முடையவர்.

இப்பெரியவர்க்குக் குடிவிளக்கப் பிறந்த குமாரர்கள் அறுவர். அவராவார், 1. நா. சிவசுப்ரமண்ய முதலியார், 2. நா. சங்கர முதலியார், 3. நா. தாமோதர முதலியார், 4. நா. சம்பந்த முதலியார், 5. நா. திருநாவுக்கரசு முதலியார், 6. நா. ஈசுவரப்ப முதலியார் என்பவரே. இவர்கள் யாவரும் தமது தந்தையரைப் போலவே தம் உயர்ந்த குடிப்பிறப்பிற் குரித்தான தருமங்களி னின்றும் ஒரு சிறிதும்

வழுவாது, குலம், தனம், வித்தைகளிற் பெரும்புகழ் படைத்தும் அவற்ருல் இயல்பாகவே நேரக்கூடிய அகங்கரிப்பைக் கொள்ளாது, அன்பு, ஈகை, இரக்கம், இன்சொல், நடுநிலை முதலிய உயர்தரக்குணங் களையே வெளிப்படுத்தி வாழ்ந்து வந்தனர்.

இன்னவருள் நா. சங்கர முதலியார் பிரமசரிய நிலையிலேயே யிருந்து தமது காலத்தைக் கழித்தனர்; சமுசாரம் சாகரம் போன்ற தாதலின், அதிலிறங்கியவர் கரை யேறுவது மகா கஷ்டம் என்னுங் கொள்கையைப் பெரிதும் மனங்கொண்டனர். "வேர் புணர்ந்து நுனிக் கணிதேர் உறவியின் (எறும்பைப் போல்) இல்லத்திருந்தே வீடாள லாம்" என்னும் பெரியோர் உடன்பாடு இவர்க்குக் கஷ்ட சாதன மாய்க் காணப்பட்டது. இவரைப் போலவே இவருடைய பின்னவ ரான நா. திருநாவுக்கரசு முதலியாரும் பிரமசாரியராயிருந்து சிவத் தொண்டிற் சிறந்து விளங்கினர்.

நா. ஈசுவரப்ப முதலியார் என்பவர் தனக்கோட்டியம்மா ளென்னும் பெண்கள் நாயகத்தைப் பாணிக் கிரகணஞ் செய்துகொண்டு சுந்தரமூர்த்தி முதலியா ரென்பவரைத் திருக்குமாரராகப் பெற்றெ டுத்தார். அந்த சுந்தரமூர்த்தி முதலியார் அலர்மேலம்மா ளென்னும் ஸ்திரீ ரத்னத்தை மணந்து காளத்தி கண்ணப்ப முதலியாரை மகவா யடைந்தார்.

காளத்தி கண்ணப்ப முதலியார் வடமொழி தென்மொழிகளில் பாண்டித்யம் பெற்று, சிவாகமங்களிலும் சிற்பத்திலும் தேர்ந்து பிர சித்தி யடைந்தார். இவர் வழுதலம்பேடு கோகிலாம்பாள் என்னுங் குணமணியைத் தீவலஞ்செய்து நடராஜ முதலியாரை ஈன்றெடுத்தார்.

நடராஜ முதலியார் மன்னியம்மாளென்னும் மாதரசியை மனைவி யாகப் பெற்று, நாயிறு புஷ்பாலீஸ்வர ராலயத்தில் ஓதுவாராய், சிவத் தொண்டு புரிந்து வந்தார். இவருக்கு மெய்கண்ட முதலியார் திருக் குமாரராக உதித்தார். இக்குமாரர் தண்டமிழ்ப் பாஷையில் பண்டி தோத்தமராய், நாயிறு என்னுங் கிராமத்திலுள்ள குடி மக்களுக்கெல் லாம் கல்வி பயிற்றுவித்து உபாத்தியாயர் என்னும் பட்டம் பெற்ற வர். இவர் மல்லீஸ்வரியம்மா ளென்னும் மங்கையர் பூஷணத்தை மணந்து திருப்பாலவனத்துப் பிள்ளை என்பவரைப் பெற்ருர். இப் பிள்ளை ஆதி சைவசமய போதகராயிருந்து காமாக்ஷியம்மாளென்னுங் கன்னிகா ரத்னத்தைக் கைப்பற்றி, சிவசங்கர முதலியார், கங்காதர

முதலியார் என்னும் இரண்டு புதல்வரை யடைந்தார். இத்தநயரிருவரில் சிவசங்கர முதலியார் வடமொழி தென்மொழி பயின்று, அம்புஜம்மா ளென்னும் ஆயிழையை மணந்து, நாயிறு சிவாலயத்தில் ஓதுவாராயும், சிவநேசச் செல்வருக்குத் தீக்ஷா விதிகளை நடத்துவோராயுமிருந்து சிஷ்ய வர்க்கத்துடன் பெரும்புகழ் பரப்பி வாழ்ந்து வந்தார்.

சிவசங்கர முதலியார்க்கு முத்துசாமி முதலியார், தெய்வசிகாமணி முதலியார் என்னும் இரண்டு குமாரர்கள். இவர்களுள் முத்துசாமி முதலியாருக்கு பூதகிரி முதலியா ரென்றும், ஆயிர முதலியா ரென்றும் இரண்டு புத்திர ரத்தினங்கள் பிறந்தனர். பூதகிரி முதலியார் இரண்டுதாரங் கொண்டனர். முதல்தாரத்திற்கு இராஜகோபால முதலியார் சுந்தரம்மாள் என்பவர் உதித்தனர். இரண்டாந் தாரத்திற்கு ஒரே ஆண் மகவு. நிற்க,

ஷை ஆயிர முதலியார், வழுதலம்பேடு என்கிற கிராமத்தில் சீருஞ் சிறப்பும் பொருந்தியிருந்த முடிச்சூர் திருநாராயண முதலியார் குமாரரான ஸ்ரீவைஷ்ணவர் முடிச்சூர் ஸ்ரீமத் உ-வே. அப்பாவு முதலியார் என்பவருக்குத் தாயாதியும், அரங்கநாத முதலியாருக்கும் அவர் மனைக்கிழத்தி கொடியிடை யம்பாள் என்னுங் குணவதிக்கும் பிறந்த தவப் புதல்வியுமான உண்ணாமுலை யம்மாளென்னும் கற்புக்கரசியை விவாகம் புரிந்து, ஐந்து ஆண்மக்களையும் இரண்டு பெண்மக்களையும் பெற்றெடுத்தார். அவ்வெழுவராவார், 1. கேசவ முதலியார், 2. வெங்கடாசல முதலியார், 3 சேஷாசல முதலியார், 4. திருவேங்கட முதலியார், 5. இரங்கம்மாள், 6. பார்ப்பாத்தி யம்மாள், 7. ஸ்ரீ கண்ணபிரான் முதலியார் என்பவரே.

மேற்சொன்ன சிவசங்கர முதலியார் சைவாபிமானத்தோடிருந்த காலத்தில் இடையிடையே ஸ்ரீ வைஷ்ணவ வாதத்தில் ஈடுபடநேர்ந்தது. அப்போது இவர் தாம் தழுவியமதத்தின் உண்மையைக் கூர்ந்து பரியாலோசனை செய்யத்தலைப்பட்டார். வைணவமதத்தில் ஸ்ரீயப்பதிக்கும் அவரது அவதார மூர்த்தங்களுக்கும் அபேதஞ்சித்திருத்தலையும், சைவமதத்தில் சத்திமுதல் குமரனீறாகவுள்ள மூர்த்தங்களுக்கு அத்தகைய ஒழுங்கான அபேதஞ் சித்தியாமையோடு, சத்தி சிவபிரானினும், சிவபிரான் சத்தியினும், விநாயகர் யாவரினும், குமரக்கடவுள் எல்லோரினும் பரத்வம் பெற்றிருப்பதாக முன்னுக்குப் பின் முரண்பட விருத்தலையும், கடவுள் எங்கும் உள்ளார் என்கிற விஷயத்தில் சிவபெருமான் யோனிஸ்தானத்தில் மட்டும் இல்லை

என்கிற கொள்கையை யுடைத்தாய், அவருக்கு அபூரணத்வத்தை ஏற்படுத்தி யிருத்தலையும், ஸ்ரீமந் நாராயணனைப்போல இச்சாமாத் திரத்தில் தன்மா தன்மங்களைக் கவனிக்க இயங்குதிணை நிலைத் திணை என்னும் இரண்டு திணைக்கண்ணும் வெளிப்படக்கூடிய பூரண சக்தி சிவபிரானிடத் தில்லாதிருத்தலையும், யோனி வழி வருவதால் கன்ம வசத்தரான மக்களுக்குரிய பந்தம் இச்சாவசத்தரான தமக்கும் வரும் என்கிற அச்சம் அச்சிவபிரானிடத்திருத்தலையும், சிருஷ்டிப் பொருள்களை ரமிக்கச் செய்வதில் "பற்றிலன் ஈசனும் முற்றவும் நின்றனன்" என்கிறபடி தாமெவ்வித கோலங்கொள்ளினும் அக் கோலம், 'சேற்றுக்கும் பிள்ளைப்பூச்சிக்கும் உள்ள சம்பந்தம் போலத் தம்மைப் பாதியாது, தம்மிடம் இவ்விஷயத்தில் சர்வ சக்தித்துவம் உண்டு' என்கிற பேரறிவை விடுத்து மக்களைப்போன்று பயங்கரங் களைச் சிவபெருமான் கொண்டிருத்தலையும் சிவசங்கர முதலியார் ஐயந்திரிபற ஆய்ந்து சைவ மதத்தைவிட்டு, ஸ்ரீ வைஷ்ணவ சமயத் தைத் தம் பெயரால் "எம்பெருமானார் தரிசனம்" என்று விளங்க வைத்த ஜகதாசாரியராகிய இராமாநுஜாசாரியருடைய திருக்குமாரர் களான எம்மான் பெம்மான் என்பவர்களின் சந்ததியைச் சேர்ந்த பொன்னேரி, ஆயர்பாடி, ஸ்ரீமத் உ-வே. இத்யாதி ஆசூரி - இராமா நுஜாசாரிய சுவாமிகளின் திருவடிகளிலே ஆஸ்ரயித்து, சகலார்த்தங் களுங் கேட்டுத் தெளிந்து ஸ்ரீ வைஷ்ணவராய், தமது குடும்பத்தா ரையும்திருத்தி வைஷ்ணவராக்கினர்.

இந்த சிவசங்கர முதலியார் காலத்தில் குடும்ப விவாதம் ஏற் பட்டு அவர் சந்ததியார் பலர், புழல், மாதவரம், சிந்தாதிரிப்பேட்டை, எச்சூர், விச்சூர், கானகுழிப்பேட்டை, வாயலூர், செஞ்சி, மதுராந் தகம், பொன்விளைந்த களத்தூர், திருவண்ணுமலை, திருக்கோவலூர், மெய்யூர், பிறையாறு, தரங்கம்பாடி முதலிய வூர்களுக்குப் பிரிந்து போய் வாழ்வாராயினர்.

மேலே சொன்ன ஆயிர முதலியாரின் மக்களெழுவருள் கேசவ முதலியார் எச்சூர் நாராயண முதலியாரது குமாரத்தி தெய்வ நாயகி அம்மாளை விவாகம் புரிந்து கொண்டு தமது வாழ்நாளைக் கடத்திவந் தார். ஸ்ரீரங்கம்மாள், பொன்விளைந்த களத்தூர் நாராயண முதலி யார் குமாரர் சபாபதி முதலியாரை மணந்து கொண்டு வாழ்வாராயி னர், வெங்கடாசல முதலியார், வாயலூர் முத்துசாமி முதலியார் புத்

திரி சுப்பம்மாளைக் கலியாணஞ் செய்துகொண்டனர். இவருக்குப் பழனி பார்த்தசாரதி முதலியார், ஆண்டாளம்மாள் என்பவருதித்தனர். இவர்களனைவரும் துளுவ வேளாள மரபைப் பின்பற்றியவரே.

இனி நூலாசிரியர் ஸ்ரீ கண்ணபிரான் முதலியாரைப்பற்றிக் கவனிப்போம். இவர் குரோதன வருஷத்திற் பிறந்தவர்; அப்பாவு உபாத்தியாயரிடம் அக்ஷராப்பியாசம் பெற்று அஷ்டாவதானம் மகா வித்வான் மயிலை சண்முகம் பிள்ளையவர்களிடம் தமிழ் பயின்றவர்; ஸ்ரீவைஷ்ணவ சிரேஷ்டரான உ-வே ஸ்ரீமத் முடிச்சூர் அப்பாவு முதலியாரவர்களுடைய மாணவர் ஜெஞ்ஞா மாருதம் ஸ்ரீ இராஜகோபால பிள்ளையவர்கள் குமாரர் தி. முத்துகிருஷ்ண பிள்ளையவர்களின் ஆப்தரான மே. சுந்தரராஜ முதலியாரது புருஷகாரத்தின்மேல் வீரராகவ தாசரிடம் வைணவ சத்காலக்ஷேபம் கேட்டுவந்தார்; பின்னர் உ. வே. இத்யாதி ஈயுண்ணி ஸ்ரீ நிவாசாசாரிய சுவாமிகளிடத்திலும் காலக்ஷேபத்தில் ஈடுபட்டு வேதோக்தமான அர்த்த விசேஷங்களைக் கேட்டனர்; மேற்சொன்ன பரம்பராசாரிய வமிசரான பொன்னேரி, ஆயர்பாடி, ஸ்ரீமத் உ. வே. ஆசூரி - வேங்கடாசாரிய சுவாமிகளின் திருவடி சம்பந்தம் பெற்றனர்; ஸ்ரீமத் உ-வே. அனந்தாழ்வான் சுவாமிகளிடம் பகவத் விஷயம் அநுபவித்தனர்.

இவர் இளம் வயதில் வெகுநாள் பரியந்தம் வியாதியால் பீடிக்கப்பட்டிருந்ததால் ஆங்கிலம் பூர்த்தியாகக்கற்கவில்லை. பதினைராவது வயதிலேயே இவருக்கு ஸ்ரீவைஷ்ணவ பக்தியும் அதற்கேற்றஒழுக்கமுமுண்டு. எப்போதும் இவர் பெரியோரிடத்தில் அன்புகொண்டிருத்தலும், ஆங்காங்கு நடைபெறும் சத்காலக்ஷேபங்கட்கு விஜயஞ்செய்து சிரவணித்தலும் செய்வதில் தவறுவதில்லை. இப்படி இவர் ஸ்ரீ வைஷ்ண வோத்தமராய்ப் பெருகிவரும் நாளில், கிறிஸ்தவர்கள் சென்னைமா நகரிலும் மற்ற ஸ்தலங்களிலும் தங்களுடைய மதபோதனையைச் செய்து, ஹிந்து மத வுண்மை யறியாத பேதையர்களைத் தங்கள் மதக்கொள்கையில் பற்பல தந்திரங்களைக் காட்டி இழுத்துக்கொண்டும், பலவித ஆரவாரங்களைச் செய்து கொண்டும் வந்தனர்.

இந்த துர்ப்போதனையை ஒழிக்க, 1884-ம் வருடம் ஸ்ரீவிசிஷ்டாத்வைத சித்தாந்த பிரபோத சங்கம் ஒன்று, சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, சாமிபண்டாரம் வீதி, ம-ா-ா-ஸ்ரீ பட்டரை பார்த்தசாரதி நாயகர் ஹாலில் ஸ்தாபிக்கப்பெற்றது. இச்சங்கத்திற்குத் தலைவர் ஸ்ரீமான்

தி. கோ. முத்துகிருஷ்ண பிள்ளையவர்கள். காரியதரிசி ம. வரதராஜுலு நாயுடு. மற்ற அங்கத்தினரும் ஏற்படுத்தப்பட்டனர். இச்சங்கத்தில் மாதம் ஏழுமுறை உபந்நியசித்துவரவும், வியாசங்களெழுதிப் பயின்று வரவும் உண்டாகிய ஏற்பாட்டின்படி ஸ்ரீமான் நா. ஸ்ரீ கண்ணபிரான் முதலியாரும் உபந்நியசித்து வந்தார்.

தத்தமது குடிப்பிறப்பின் உயர்வையும், தங்களுடைய பாரம்பரியமான ஆசாரத்தையும் கூர்ந்து கவனியாமல், முதலிற் பேராதரவு போல் காணப்பட்டு உடனே நிராதரவாகக் கூடிய புறமதங்களிற் பிரவேசித்துள்ள நம்மவரையும் ஆதிதிராவிடரையும், தேகாரோக்கியத்திற்கும் ஆத்மா ரோக்கியத்திற்கும் இணையற்ற நலங்களைச் செய்யக்கூடியதும், எவ்விஷயத்திலும் தாழ்வற்றதும், ஆலமும் வீழ்தும் போல் நின்று அநாதிகாலந்தொட்டு வாழையடி வாழையாய்ப்பெருகி வருவதுமான நம் இந்து மதக்கோட்பாட்டிற்குத் திருப்பும் விஷயத்தில் இவருக்கு அப்போதே பெருநோக்கம் உண்டு.

அக்காலத்தில் சென்னையில் தத்துவ விசாரணி என்னும் பத்திரிகை வெளிவந்துலவ ஆரம்பித்தது. இப்பத்திரிகை வெறும் நாஸ்திகத்தைப் பற்றிப் பேசிவந்தது. இதை மறுத்து ஆஸ்திக ஸ்தாபனஞ் செய்ய ஓர் ஏற்பாடாயிற்று. இந்த மறுப்புப் பணியும் நமது ஸ்ரீ கண்ணபிரான்முதலியாருக்கே ஒப்புவிக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீபரம ஹம்ஸ பரிவிராஜ உபய வேதாந்த பிரவர்த்தகரும், பூர்வமீமாம்ஸை உத்தர மீமாம்ஸையில் தேர்ச்சி பெற்றவரும், மகாவித்வ சிகாமணியுமாக விளங்கிய கப்பியாமூர் சுவாமிகளென்றும் திருவேங்கட ராமாநுஜ ஜீயர் என்றும் இயற்பெயருடைய ஸ்ரீமத் மதுரைமங்கலம் எம்பார் சுவாமிகளவர்கள், சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் ஸ்ரீ பெரும்பூதூர் வசந்தோற்சவ மண்டப கைங்கரியத்திற்காக விஜயஞ் செய்திருந்தனர். இவருடைய பெருமை அளவு கடந்தது. இவரது கல்வித்திறத்தைக் கேள்விப்பட்டு ஆரிய சமாஜத் தலைவர் ஸ்ரீமத் தயாநந்த சரஸ்வதி யவர்கள் வடக்கே இருந்து இவரைப்பார்க்க வேண்டுமென்கிற அவாமிகுதியால் சென்னைக்கு வந்தனரென்றால் இவருடைய பிரக்யாதியைப்பற்றி விஸ்தரிக்கவும் வேண்டுமோ? ஆனால் ஸ்ரீமத் தயாநந்த சரஸ்வதி யவர்கள் வந்த சமயத்தில் ஸ்ரீமத் எம்பார் சுவாமிகள் திருநாட்டுக்கெழுந்தருளி விட்டனர்.

அப்பெருந்தகையாரான ஸ்ரீமத் எம்பார் சுவாமிகள் இங்கு விஜயஞ்செய்திருந்தகாலத்தில் நமது ஸ்ரீகண்ணபிரான் முதலியாரது உபநியாசத்தைக் கேட்டு "இனி நீர் பலர்முன் பகிரங்கமாக உபந்யசிக்கக்கடவீர்" என்று அவருக்கு மங்களா சாஸனஞ் செய்தனர். அம்மங்களா சாஸனத்தையே உபதேச மாகக்கொண்டு சொந்தமதமான விசிஷ்டாத்வைத மதபோதனையையே மிக்க சிரத்தையுடன் உபந்யாசஞ்செய்து வந்தனர் நமது முதலியார்.

அக்காலத்தில் கிறிஸ்தவர்களின் உபத்திரவம் அதிகரித்தது. இந்துமத ஐக்கிய மத்தியத்துடன் புறமதக் கண்டனம் செய்ய ஸ்ரீமான் கண்ணபிரான் முதலியார் ஆரம்பித்தனர். அப்போது ஸ்ரீ விசிஷ்டாத்வைத பிரபோத சங்கம் அல்லது ஹிந்து பிரீச்சிங் ஸொஸைடி (Hindu Preaching Society) ஒன்று, கிறிஸ்து மதஞ்சார்ந்தவர்களைத் திருப்பவும், பிறரை அம்மதஞ்சாராதபடி தடுக்கவும் ஸ்தாபகமாய் நமது முதலியாரையே அதற்குக் காரியஸ்தராக நியமிக்கலாயிற்று.

ஸ்ரீமான் கண்ணபிரான் முதலியார் இவ்வேற்பாட்டின்படி வடவேங்கடம் முதல் தென்குமரி யீருக வுள்ள தமிழ் தேசங்களுக்குச் சென்று இந்து மதப்பிரசாரணம் புரிந்து, வேலூர், ஆரணி, பெங்களூர் முதலிய இடங்களில் இந்து மதப்பெண்பாட சாலைகள் ஸ்தாபித்து வந்தார். அச்சமயம் ஸ்ரீ லோக ரஞ்சனி பத்திரிகையொன்றும் ஸ்தாபிக்கப் பெற்றது. நமது முதலியார் பிரபல பேரடைந்து வரும் போது ஹிந்து டிராக்ட் சொஸைடி (Hindu Tract Society) ஒன்று ஸ்ரீமான் சை. இரத்தின செட்டியாரவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு பற்பல துண்டுப் பிரசுரங்கள் (Tracts) வெளியிடப்பட்டு வந்தன.

நமது முதலியாரவர்கள் இந்த சொஸைடியாரால் தமக்களிக்கப்பட்ட பணியிலுந் தலைநின்று,

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்" அதாவது

சொல்லும் விஷயங்களைச் சிநேகபாவத்திருந்து அங்கீகாரஞ் செய்தவரை மீண்டும் அந்த அங்கீகாரத்திருந்து பிரிவுறு திருக்கக் கட்டுப்படுத்தவல்ல குணங்களை அன்னோர் மேலும் மேலும் கொள்ள விரும்புமாறும், பகைமையாய் அவ்விஷயங்களை ஏற்றுக் கொள்ளாதவரை

அப்பகைமை நீங்கி நட்பினை விரும்பும் வண்ணமும் சொல்லப்படுவதே சொற்றிறம் என்கிற உண்மையை இயற்கையாகவே ஸ்ரீ கண்ண பிரான் முதலியார் பெற்றவராய் பற்பல நற்போதங்களை அதிசமர்த் திடன் பிரசங்கித்து வந்து பலரை நல்வழிப் படுத்தினர்.

இச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீமான் சிவசங்கர பாண்டியாஜி யவர்க ளும், இந்து பத்திராசிரியர் ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய அய்யர் அவர் களும், இந்து பத்திரிகாலய மானேஜர் ஸ்ரீமான் மு. வீரராகவாசாரி யாரவர்களும், திவான்பகதூர் ஸ்ரீமான் ரகுநாதராவ் அவர்களும், ஸர். டி. ஸ்ரீமான் மாதவராவ் அவர்களும், ஆந்திரப் பிரகாசிகா பத்திரிகா சிரியர் ஸ்ரீமான் A. C. பார்த்தசாரதி நாயுடு அவர்களும், ஞானாமிர்த பத்திராசிரியர் திருவாவடுதுறை ஆதீன மகாவித்வான் ஸ்ரீலஸ்ரீ சபா பதி நாவலரவர்களும், பிரபந்த வித்வான் ஸ்ரீமான் சே. முத்து கிருஷ்ண நாயுடு அவர்களும், ஸ்ரீமான் T. பக்தவத்ஸலம் பிள்ளை B.A. அவர்களும், ஸ்ரீமான் T. K. பார்த்தசாரதி முதலியாரவர்களும், ஸ்ரீமான் T. N. கிருஷ்ணஸ்வாமி நாயுடு அவர்களும், ஸ்ரீமான் பல் லாரி R. V. சபாபதி முதலியாரவர்களும், ஸ்ரீமான் திருவேங்கட முதலியாரவர்களும், பச்சையப்பன் காலேஜ் புரொபஸர் ஸ்ரீமான் சி. கோபாலகிருஷ்ண முதலியார் B. A., அவர்களும், ஸுபிலேகா பத் திராசிரியர் ஸ்ரீமத் சேஷாசார்லு அவர்களும், ஸ்ரீமான் பத்தி கிருஷ்ண ஸ்வாமிநாயுடு அவர்களும், ஸ்ரீமான் பத்தி நாராயணஸ்வாமி நாயுடு அவர்களும், ஸ்ரீமான் T. பாலசுந்தர முதலியார் அவர்களும், ஸ்ரீமத் யோகிபார்த்தசாரதி அய்யங்கார் M. A. B. L., அவர்களும், திவான்பக தூர் ஸ்ரீமான் கேசவ பிள்ளையவர்களும், ஸ்ரீமான் P. விஜயரத்தினம் பிள்ளையவர்களும், டிஸ்டிரிக்ட் ஸர்ஜன் ஸ்ரீமான் இலக்ஷ்மணப்பிள்ளை L. M. S., அவர்களும், கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் கோபாலாசாரிய சுவாமிகளவர்களும், ஸ்ரீமான் கோ. வடிவேலு செட் டியாரவர்களும், ஸ்ரீமான் பு. ஆறுமுக முதலியாரவர்களும், ஸ்ரீமான் சை. இரத்தின செட்டியாரவர்களும், ஸ்ரீமான் நா. வேணுகோபால முதலியாரவர்களும், ஸ்ரீமான் வ. மகாதேவ முதலியாரவர்களும், ஸ்ரீமான் சென்னகேசவுலு நாயுடவர்களும், ஸ்ரீமான் ரா. சடகோப முதலியாரவர்களும், ஸ்ரீமான் அப்பு முதலியாரவர்களும், ஸ்ரீமான் P. வரதராஜுலு நாயுடு அவர்களும், திருவிருத்தம் (மாவுகிடங்கு) ஸ்ரீமான் நாராயணசாமி நாயகரவர்களும், ஸ்ரீமான் P. முனிசாமி நாயுடு அவர்களும், மற்றுமுள்ள பிரமுகர்களும் நமது ஸ்ரீ கண்ண

பிரான் முதலியாரவர்களுக்குச் சரீர சகாயமும் வாக்குச் சகாயமும் பெரிதும்புரிந்து உற்சாகமூட்டி வந்தனர். இவர்களுடைய உதவியை முன்னிட்டு நமது முதலியார் செய்யவேண்டியவற்றைத் திருப்திகாமாகச் செய்து வந்தார்.

இக்காலத்தில் இவர் ஸ்ரீமத் உ. வே. இத்யாதி மு. அப்பாவு முதலியாரவர்களின் மாணவரில் ஒருவரால் பிரசித்திவாய்ந்த பிரபந்த வித்வான் ஸ்ரீமத் முதலியாண்டான் சுவாமிகளிடம் அஷ்டாதச ரகசியமும் நன்குணர்ந்தார். ஸ்ரீவைஷ்ணவமதப் பிரபாவத்தையே கையாண்டு வந்த இவர், தேச க்ஷேமத்தின்பொருட்டு, இந்துமதப் பிரசாரகராய், பொது விஷயங்களையும் யாவர்க்கும் எடுத்துரைத்து அனேகரை இந்துமத வுண்மையி லாழ வைத்தனர்.

ஸ்ரீமான் பைசானி மாதவ செட்டியாரவர்களும், ஸ்ரீமான் பை. இரங்கைய செட்டியாரவர்களும், ஸ்ரீமத் முதலியாண்டான் சுவாமிகளுடன் கூடிவந்து நமது ஸ்ரீ கண்ணபிரான் முதலியாரவர்களுடைய உபந்யாசத்தைக் கேட்டு மனக்களிப்புற்று இவரைக்கொண்டாடியதுடன் "பைசானி மாதவ செட்டி தர்ம கைங்கரியம்" என்னும் தர்மசாலையையும் எற்படுத்தி அதில் ஓர் உபநியாசகராய் வைத்து முதலியாரவர்களைக் கிராமங்கள் தோறும் சென்று உபநியசித்து வரும்படி பை. செட்டியார் அவர்களும் அவருடைய குமாரர் பை. ரங்கைய செட்டியாரவர்களும் ஸ்ரீ முதலியாண்டான் சுவாமிகளும் ஸ்ரீ கண்ணபிரான் முதலியார் அவர்களை மங்களாசாஸனம் செய்து கேட்டுக்கொண்டனர். அ்ந்த பிரகாரம் நடைபெற்று வருகிறது.

சென்னை, தையூர், பிறையாறு, தரங்கம்பாடி, பெங்களூர், வேலூர், சித்தூர், ஆரணி முதலிய இடங்களில் நமது முதலியார் தமது சுயமதமாகிய ஸ்ரீவைஷ்ணவ தருமங்களைக் கைவிடாமலே அவசியமானவர்களுக்கு அவற்றைப்போதித்து நல்வழிக்குக் கொண்டுவந்ததுடன் புறமதஸ்தர்களுக்கு நமது இந்துமத போதனையை வற்புறுத்தி அவர்களைத் திருத்தி வந்தார்.

ஆதிதிராவிடரை முன்னுக்குக் கொண்டுவரும் விஷயத்தில் நம் முதலியார் எடுத்துக்கொண்ட சிரமம் மெத்தவும் பாராட்டத்தக்கது. மதமாறிய பலருக்குப் பிராயச் சித்தாதிகளைச் செய்வித்து அவர்களை அவர்களுடைய பெற்றோர்களிடம் ஒப்புவித்துவந்தார்.

சால்வேஷன் ஆர்மி (Salvation Army), உள்ளூர் கிறிஸ்தவ மதம், ஆரியசமாஜம், பிரமசமாஜம், வேதசமாஜம், நாஸ்திகம், புத்தம் முதலிய மதவாதிகளோடு வாதிட்டுத் தமது கொள்கையை நிலைநாட்டினர்.

இவரது பிரசங்கத்தைத் தடுக்கவேண்டி ஸ்ரீமான் இராஜுநாயுடு அவர்களும், Rev. ஜான், Rev. கப்பன் முதலிய பாதிரிகளும் நேரில் இவரோடெதிர்க்கும் ஆற்றல் அற்றவராய், சீர்மைக்கு (London) ப் போய் இந்திய மந்திரியாரான கனம் கிளேட்ஸ்டன் (Gladstone) அவர்களிடம் பேசினார்கள். அம்மகானுபாவர் அவ்விஷயத்தில் தமக்குத் தலையிட நியாயமில்லை, மகாராணியாரும் சக்ரவர்த்தினியாருமாகிய ஸ்ரீ விக்டோரியா அம்மையார் இவ்விஷயத்தில் இராஜாங்கத்தார் தலையிடக்கூடாதென்று உத்தரவிட்டிருக்கிறாரென்று அகற்றிவிட்டார்.

ஸ்ரீமான் கண்ணபிரான் முதலியாரவர்களுக்கு 22-வது வயதில் விவாகமாயிற்று. இவருக்கு இல்லக்கிழத்தியாக வந்த பெண்கள் நாயகம், காவாந்தண்டலம் ம-ள-ள-ஸ்ரீ, வேங்கடாசல முதலியாருக்கும் சிவகாமி அம்மாளுக்கும் பிறந்ததவப்புத்திரியாரான தாயாரம்மாளென்பவர். இவர்களிருவரும் மிக்க ஆசாரசீலராயிருந்து இல்லற தருமத்தைப் பரிபாலித்துப் புகழுடன் வாழும் நாளில் பகவத் கடாக்ஷத்தால் இவர்களுக்கு சந்தான விருத்தியு முண்டாயிற்று.

1-பங்கஜவல்லித் தாயார், 2-பாலசரஸ்வதி, 3-தேவராஜகிருஷ்ணன், 4-நவநீதகிருஷ்ணன், 5-வகுளபூஷண பாஸ்கர ராதாகிருஷ்ண ராமாநுஜன் என்பவர்கள் இவருக்கு மக்கட்பேறுனார்கள்.

இவர்களில் பங்கஜவல்லித்தாயார், திருக்கழுக்குன்றம் பாரெஸ்ட் ரேஞ்சர் ம-ள-ள-ஸ்ரீ, சண்முக முதலியாரின் மனைவியாராகிய வீரம்மாள் என்கிற பார்ப்பாத்தியம்மாளின் குமாரர் மதுரைநாயக முதலியாரை மணந்து இல்வாழ்க்கையை நன்கு நடத்தி வரலாயினர்.

இரண்டாவதான பாலசரஸ்வதி பிறந்த எட்டாம் மாதத்திலேயே திருநாடலங்கரிக்க நேர்ந்தது.

மூன்றுவதான தேவராஜ கிருஷ்ண முதலியார் மெய்யூர் ஸ்ரீமான் சீதாராம பிள்ளையவர்கள் குமாரர் ஸ்ரீமத் மெ. திருவேங்கடசாமி பிள்ளை அவர்களுக்கும் அவர் மனைவியார் ஸ்ரீமத் அலர்மேலம்மாளுக்கும்

பிறந்த புத்திரவதி ஸ்ரீரங்கநாயகி அம்மாளைத் தீவலம் புரிந்து இல்லற வாழ்வைச்செவ்வனே செய்து வரலானர்.

நான்காவதான நவநீத கிருஷ்ணன் பிரமசாரியாகவே இருக்க லாயிற்று.

ஐந்தாவதான வகுளபூஷண பாஸ்கர ராதாகிருஷ்ண ராமாநுஜன் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் என்னும் நான்கு பாஷையிலும் தேர்ந்து வந்தும் பதினேழாவது வயதிலேயே திருநாட்டுக் கெழுந்தருளப் பிராப்தமாயிற்று. இப்புத்திர ரத்தினம் திருநாடலங்கரிப்பதற்கு முன்னரே தம் தந்தையாராகிய ஸ்ரீமான் நா. கண்ணபிரான் முதலியாரவர்களை நோக்கி "ஸ்ரீ நம்மாழ்வார் விஷயமாய் ஸ்ரீ கம்ப நாட்டாழ்வார் சடகோபரந்தாதி செய்துள்ளார்; பின்னுள்ள வித்வான்கள் மாறன் பணித்த திருவாய் மொழிக்கு ஆறங்கங்கூற அவதரித்த திருநாவீறுடைய பிரானை திருமங்கையாழ்வார் விஷயமாக யாதொரு பிரபந்தமும் செய்யாது விட்டனர். அக்குறையை நிறைவேற்ற அப்பெருமான் விஷயமாக ஓரந்தாதி நீரே இயற்றியருள வேண்டும்" என்று பன்முறை கேட்டுக்கொண்டபோது ஸ்ரீமான் முதலியாரவர்கள் அப்புத்திர சிகாமணியைப் பார்த்து "அது ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாய கிரந்தங்களில் மிகவும் வல்லுநராகிய பெரியோர்கள் செய்யவேண்டியது. அந்த இலட்சணமறியாத நாம் செய்வது அத்துணைச் சிறப்பையளிக்காது" என்று விடைபகர்ந்து வந்தனர். தெய்வாதீனமாக அப்புத்திரர் ஆசாரியன் சரணாரவிந்தங்களை யடைந்த பின்னர் அவரது மனோபாவத்தைப் பூர்த்தியாக்க ஸ்ரீமான் நா. கண்ணபிரான் முதலியாரவர்கள் திருமங்கை மன்னன் திருவடிவழகிலீடுபாடும் ஸ்ரீ பரகாலரந்தாதியும் பாடி முடிக்க வேண்டியதாயிற்று.

ஸ்ரீமான் முதலியாரவர்கள் தமது காலப்போக்கில் ஸ்ரீ வைஷ்ணவ சம்பந்த மத விஷயமான ஆராய்ச்சியைப் புரிந்து, புறப்புறச் சமயங்கள் செய்து வரும் அட்டூழிய நிவர்த்தியையும், உள்மதச் சண்டையின் நீக்கத்தையும் ஒழித்து, ஐக்க மத்தியத்தை யுண்டு பண்ணி, நம்மக்கள் புறமதத்தவர்களின் சொல்லுக்கிணங்காத நன்மையை நாடி வந்தனர். இது மெச்சத்தகுந்ததே.

அனந்தரம் ஸ்ரீமான் முதலியாரவர்கள் சங்கீத ஞானத்தால் உண்டாகும் பகவத் பக்திரஸத்தை யுண்டு பண்ணக் கருணிகமரபினரான ஸ்ரீமான். சி. சுப்பராய பிள்ளையவர்களிடம் கலந்து யோசிக்க

அவர் பகவத் கதாப்ரசங்கத்தில் மிகவும் தேர்ந்தவரும் தமது மரபினரும் ஆகிய சபாபதி பிள்ளையவர்களைக்கொண்டு சென்னை, பள்ளியப்பன் வீதியில் ஸ்தாபித்துள்ள கல்வி மடத்தில் ஸ்ரீஉருக்மிணி கல்யாணமென்னும் பகவத் கதாப்ரசங்கத்தைத் தொடங்கிப் பல திக்குகளிலும் பரவச் செய்தனர். அது முதலாகப் பகற்காலங்களில் காகித விளையாட்டில் காலத்தை வீணே கழித்து வந்த பிரமுகர்கட்கு இக்கதாப்ரசங்கமானது காலனைய் வந்து முடிந்தது. இச் சத் விஷயங்கள் நடைபெற்று வரும்போது பொது நோக்குடைய சிலர் தோன்றி ஜனங்களுக்குள்ள இருளைப்போக்கி ஐக்ய மத்யத்துடன் ஜாதிமத வேற்றுமைகளை யொழித்து வரலாயினர். அது ஓங்கி வளர்ந்து வருகிறது

இத்தன்மையான பேருபகாரங்களில் தலையிட்டு அவற்றைச் செவ்வனே முடித்து வந்தவரும் வருபவருமான நமது ஸ்ரீ கண்ணபிரான் முதலியாரவர்கட்கு ஸ்ரீமன் நாராயணன் சகல பாக்கியங்களையும் நீண்ட ஆயுளுடன் தந்தருளி இன்னும் இத்தகைய நலங்களைப் பெருகவைத்து உலகத்தை வாழ்விக்க அப்பரஞ் சுடர்ச் சோதியான வாலறிவனது நற்றுளைப் பணிவோமாக.

இங்ஙனம் அன்பன்

ம. இராஜகோபாலன்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



# ஸ்ரீ பரகாலர் திருவைபவ மாலை.

## எண்சீர் விருத்தம்.

வளமலியுங் கலியுகத்தில் வாய்ந்தநள வருஷம்
மன்னுமுயர் கார்த்திகையிற் குருவாரந் தன்னிற்
கிளரொளிசேர் பௌர்ணமியிற் கிருத்திகைநட் சத்ரங்
கெழுமியதோர் சுபதினத்தில் விழுமியர்கொண் டாடத்
தளர்வறுசீர்க் கள்ளர்குலந் தனையாளும் கோமான்
சாந்தமிகு நீலனெனுந் தந்தை மகிழ்ந்துடலம்
புளகமுறப் புவியில்வரும் பொருவறுசார்ங் காம்சப்
பூதனெனுங் கலிகன்றி புங்கவர் பெம்மானே! (௧)

ஆர்கலிசூ ழுலகுய்ய வவதரித்த பெருமாள்
அமுதமொழிக் குமுதவலிக் கன்புடைய பெருமாள்
சீர்கொள்திரு மணக்கொல்லை சேர்ந்துறையும் பெருமாள்
திருவரசத் தருநிழலிற் சென்றமரும் பெருமாள்
ஏர்கொள்வய லாலிமண வாளனைக்காண் பெருமாள்
எதிர்த்தவனற் காலின்விர லைக்கடித்த பெருமாள்
பார்கொள்சுமை தூக்கரிதாய்ப் பரிவடைந்த பெருமாள்
பங்கயநா பன்கருணைப் பரிசுபெறும் பெருமாள். (௨)

வட்டவுல கங்களருள் மந்திரங்கொள் பெருமாள்
வாசவனீ சன்பரவு மந்திரங்கொள் பெருமாள்
சிட்டர்பல முனிவரெணும் மந்திரங்கொள் பெருமாள்
திருவட்டாக் கரமென்னு மந்திரங்கொள் பெருமாள்
கட்டெழில்சேர் வயலாலி மணவாளப் பெருமாள்
கருணைபுரிந் துபதேசஞ் செய்யமகிழ் பெருமாள்
இட்டமுடன் கலியனெனுந் திருப்பெயர்கொள் பெருமாள்
எமையாள வந்துதித்த நாலுகவிப் பெருமாள். (௩)

பேரழகால் நீலனெனப் பேருடையும் பெருமாள்
பேசரிய கலைகளெலாம் பெற்றுணரும் பெருமாள்
சூரரனை வருநிதமுந் தொழுதேத்தும் பெருமாள்
சோழநிரு பன்புகழத் துணையமரும் பெருமாள்
சீரணவுந் திருவாடன் மாவூரும் பெருமாள்
திவ்வியதே சங்கள்வலஞ் செய்துவரும் பெருமாள்
தாரணவுந் தாடாளன் தயைபகூரும் பெருமாள்
சம்பந்தன் கைவேலைத் தான்பறித்த பெருமாள். (ச)

நேசமிகு நீரில்நடப் பானிழலில் மறைவான்
நெருங்கியதோ லாவழக்க னுயரத்தொங் கிடுவான்
ஏசறுதா ளூதிடுவான் சாயைபிடிப் பானென்
றேற்றமுறு தோள்துணைவர் நால்வரையுங் கொண்டான்
ஆசுமது ரத்துடன்வித் தாரமருஞ்சித்ர
மாகுமொரு நாற்கவியு மணிபெறவே சொல்வான்
வீசுபுகழ்ச் சேனையர்கோன் மெல்லடிமே விடுவான்
வீறுறுசிந் தைக்கினியான் மெய்யருள்சேர் பெருமாள்.(ரு)

கலியனருள் மாரிகலி கன்றிகலித் வம்ஸன்
கவிலோக திவாகரனற் பரகால னீலன்
நலனுறுஷட் பிரபந்தக் கவியாலி நாடன்
நாலுகவிப் பெருமாள்நா வீறுடைய பெருமாள்
வலிகொள்கலி வைரியடை யார்சீயம் வையம்
மதியாட்ட முக்கிசதுஷ் கவிமங்கை மன்னன்
குலவுநறுங் கொங்குமலர்க் குழலியர்வேள் என்னுங்
கொற்றவே லுற்றதிரு மங்கையாழ் வாரே!

---

## நேரிசை வெண்பா.

திருவாலி நாடன் திருக்கலியன் மால்பால்
ஒருவாள் வலியோச்சி யொண்மந்—திரமாகும்
எட்டெழுத்துங் கொண்ட இணையில் பரகாலன்
கட்டழகில் ஆழுமென் கண்.

கண்ணார் கடல்வண்ணக் காரணனார் தான்களிக்கத்
திண்ணார் மணக்கொல்லை சேர்ந்திருந்து—மண்ணார்
இழிபிறவி நீங்க எதிருறுவார் தம்மை
வழிபறித்த வேல்வேந்தே வா.

"வாடினேன் வாடி வருந்தினேன்" என்றெடுத்துத்
தேடிப் பெரிய திருமொழியைப்—பாடி
நெடும்பிறவி நஞ்சுக்கு நீளமுத மாக
இடுங்கருணை யார்க்குண் டிவண்.

வாழ்த்தும் மலர்வாயும் வாண்முகமும் வண்பொருட்காத்
தாழ்த்து வலச்செவியுந் தார்மார்பும்—ஆழ்த்துமருட்
கண்ணும் கலியன் கழற்காலும் கைவேலும்
எண்ணும் தினமெனுள மே.

ஆலிநா டீதோ வரசிதோ ஈதோசீர்
ஏனும் மணக்கொல்லை யீதோதான்—நீலனார்
நேமாற்றும் மாலை நெருக்கியவன் எட்டெழுத்தை
ஏமாற்றிப் பெற்ற இடம்.

ஸ்ரீ திருமங்கை யாழ்வார் திருவடி வழகில்

# அடியார்கள் ஈடுபாடு.

எச்சரிக்கை ! பராக் !! ஸ்வாமி பராக் !!!

தாரக போஷக போக்யானு குணதி தேவா மோதா !
தராதலோத் தாரணுவதார சார்ங்காம்ஸபூதா !
சமாநாதிக ரஹித சௌந்த்ராங்க விநோதா !
சர்வதுன்மத கர்வ நிவாரணு நந்தபோதா !
சர்வா பீஷ்ட ப்ரதோபாய தனிமந்த்ர மெய்துதீதா !
சடகோப வாங்மயத் தமிழ்மறைக் கமிழ்தெனவாறங்க முதவுமதீதா !
சௌசீல நெடுவேல பரகால மிருகோல தனிநீலனும் ப்ரக்யாதா !
தாதோடு வண்டலம்பும் தண்மங்கைநாதா ! தமிழ்ச் சொலாஞ்சகஸ்ர [வேதா !
நல்லிசைக் குமுதவல்லி சமேதா ! நற்குணதீதா !
நளினமலர்ப்பாதா ! நாரணனுருடனுடிய விவாதா !

ஏ ! மங்கை வேந்தே ! கண்டல் வேலிமங்கை வேந்தே ! காரார் புறவின் மங்கைவேந்தே ! கன்னிநன் மாமதிள் மங்கைவேந்தே ! கலிகெழுமாடவீதி வயல்மங்கை வேந்தே! கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கை வேந்தே! வண்டுபாடும் பைம்புறவின் மங்கை வேந்தே! வாரணங்கு முலைமடவார் மங்கை வேந்தே! வல்லிப் பொதும்பிற் குயில் கூவுமங்கை வேந்தே! வலிகெழு மதிளயல் வயலணி மங்கை வேந்தே! தோடுவிண்டலர் பூம்பொழில் மங்கை வேந்தே ! புலமங்கைக்குல வேந்தே! மஞ்சுலாஞ்சோலை வண்டறைமாநீர் மங்கை வேந்தே!கற்றூர் பரவும் மங்கை வேந்தே! பார்மலிமங்கை வேந்தே! சுரும்பார் பொழில் மங்கை வேந்தே! ஜய ! ஜய !! எச்சரிக்கை !!!

ஸ்வாமி! ஸ்ரீய:பதியால் தேவரீருக்கிடப்பட்ட திருநாமத்தைக் கலியனென்கோ ? கல்லின்மலிதோட் கலியனென்கோ ? கல்லின் மன்னுதிண்டோட் கலியனென்கோ? கல்லார் திரடோட் கலியனென்கோ? கன்னவிலுந்தோட் கலியனென்கோ? கலங்கலில்லாப் புகழார் கலியனென்கோ? கலையார்பனுவல்வல்ல கலியனென்கோ? கறைவளரும் வேல்வல்ல கலியனென்கோ? கன்றி நெய்ந்நீர் நின்ற வேற்கைக் கலியனென்கோ? காமக்கதிர்வேற் கலியனென்கோ? கையிலங்குவேற் கலியனென்கோ? காய்சினவேற் கலியனென்கோ? கூரார்ந்தவேற் கலியனென்கோ? பாரலரிந்ததொல் புகழ்க்கலியனென்கோ? கூர் கொள்நல்ல வேற்கலியனென்கோ? மானவேற் கலியனென்கோ? ஊனுர்வேற்கலியனென்கோ? ஏ! மங்கையர் தலைவா? மன்னுமாமாட மங்கையர் தலைவா? கன்னிநன்மாட மங்கையர் தலைவா? மலைகுலாமாட மங்கையர் தலைவா? கலிகன்றீ ! வாட்கலிகன்றீ ! கற்றநூற்கலிகன்றீ ! ஏந்தெழிற்றோட்கலிகன்றீ? காமருசீர்க்கலிகன்றீ! வடிகொள் நெடுவேல் வல்ல கலிகன்றீ ! பராக் ! பராக் !! எச்சரிக்கை !!!

# திருப்பாதாதி கேசம்.

ஜய விஜயீ பவ !

நாயன்தே ! நாயன்தே !!

## திருவடி.

குளிர்ந்து மிளிர்ந்து நீரிற்பிறந்து கொழுத்துச் செழித்துத் தழைத்துப் பழுத்துக் குணதிசைச் சிகரத் தணை தருகின்ற ஆதித்த னுடைய சோதிக் கிரணத்தால் விகசித்துச் சிவந்த இதழ்களையுடைத் தாய், உவமிக்கத் தன்னினும் உயர்வாகக் கிடைப்பது வேறொன் றின்றி விளங்கி, நிறத்திற் பவளத்தையுங் குவளையாக்கத்தக்க தேவரீ ரது திருப்பாத கமலங்களின் போக்யதாதி சயத்துக்கோர் போலியா யமைந்துள்ள கந்தமேவர விந்தப்பூவை யதின் சர்வ கர்வ பங்கார்த்த மாக உமது இணைத்தாள்களின் கீழொதுக்கி, யதின் சிரசின்மீது வெற்றி குலவப்பற்றி நிலவும் திருக்கழல்களினழகும்:—

உ. **திருப்பாதவிரல்:**—விற்பனர் பரவும் அற்புதம் வாய்ந்த கற் பகப்பூவின் பொற்புறும் அரும்பினுடையவும், ஈரம் நிரைந்த நீரி லுறைந்து துவளும் பவளக் கவினுர் கொடியினுடையவும் ஒருமித்த காந்தியை மாந்தி துதியுறுங் கதிரவன் விதியிளஞ் சுடரினை நிகர்த்து, முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும் தத்திப்பதித்துத் தலைப் பெய்தாற் போன்று ஒத்திட்டுள்ள திருப்பாத விரல்களினழகும்:—

௩. **நகம்:**—அந்தியம் போதினி லந்தரத்திருந்து சுந்தரச் சுடர் தரும் சந்திரன், வடிவிற் சிறுத்தும் பெருத்தும் நிற்பதோடு, என்றும் ஒன்றுவதன்றிப் பத்தாக விராமையாலும், உவமைக்கு இவ்விரண்டி னுஞ் சீரிய தொன்றெளி தினகப்படாமையாலும், இவற்றையே ஒரு வாறு ஒத்தொளிரும் திருவடி விரல்களின் திருநக வழகும்:—

௪. **புறவடி:**—முழுதுலகத்தும் பழுதற நிலவத் தொழுதகை யாளர் நூல் எழுது புத்தகத்தை ஏய்ந்து செம்மை வாய்ந்து விளங் கும் புறவடியினழகும்:—

௫. **கணைக்கால்:**—வம்பர்தம்முயிரை யும்பர் நாட்டுய்த்து அவர் வெம்பு மெய்யதனைப் பம்புநாய் நரிக்கிடும் அம்பறுத்தூணியை ஒரு விதம் மருவிடும் தீங்கணையாத பூங்கணைக் காலினழகும்:—

௬. தோடை:—உவரி சூழ்தரும் அவனி முழுமையும் தவறுரு வகை தாங்கி நிற்கும் இசைக்குரித்தாகிய திசைக்கரித் துதிக்கையை விதியிலாதெதிர்த்து வதிதருஞ் செய்ய திருத்தொடையழகும்:—

௭. உந்தி:—வலஞ் சுழித்தோடு நீர்ப் பொலஞ் சுழியதனையும் புகழுறு மணங்கமழ் மகிழ மாமலரையும் சிறிது நேரெனக்கருத இலங்கும் திருவுந்தியழகும்:—

௮. மார்பு:—பாரொடு வானும் பேரொலி யார்த்திதன் நேரிலை யெனப்புகழ் சீரினைப் பெற்ற மேருமால் வரையும் என்னே என்னே என்னலாம்படி நன்னயப் பொன்னணி மின்னிற் றுன்னப் பரந்து சிறந்து தெண்டிரைப் பூமியாம் பெண்டு நாண் கொண்டிட விளங்குந் திருமார்பினழகும்:—

௯. கரம்:—செயிரிலாக் குணதிசை ஐராவதத்தின் அந்த மிகுந்த தந்தநடுவிற், றங்கிமாண்பொடு தொங்கு நெடுங்கரத்துடன் போரிட்டுப்பொலிவுற்றுக், கெழுமுறு முழந்தாளின் கீழும் நீண்டொளிர்ந்து "மாமேகம்" என்பதைக் காட்டுவதுபோல் நெஞ்சுக்குச் சரியாகச் சிறிது சாய்த்து அஞ்சலித்த திருக்கையினழகும்:—

௰. நகம்:—சிந்தாவளனுறு செந்தா மரைப்பூவின் பக்குவ மொக்குளை ஒக்கினும் ஒக்குமென் றிக்குவலயந் தொழும் திருக்கை விரலின் திருநகவழகும்:—

௧௧. திருப்புயம்:—மிகை மிகமுந்தப் புகைவிழியுந்த வகைவகை பந்தத் தொகை கொடுவந்த பகைவர்களின் வலிசிந்த நகைபுரிந்து அவர் தம்சொந்த உயிர்தனைத்தந்த வீரம் பொருந்தி, அத்துணை உயர்ச்சியும் அமைதருதிரட்சியும் தனக்கு இன்மையால், விரிந்தோங்கிநின்ற பொன்மலையும் ஈடன்றெனமனஞ் சரிந்தோங்கிக் குன்றப் பொலிந்து உருண்டு திரண்டு விளங்கும் திருப்புயவழகும்:—

௧௨. திருக்கண்டம்:—கடலிற் பிறந்து கருதாது பஞ்சசனன் உடலில் வளர்ந்துபோய் ஊழியான் கைத்தலத்துத் திடரிற்குடியேறித்தீயவசுரர் நடலைப்படமுழங்குந் தோற்றத்து ஏற்றம் வாய்ந்த ஸ்ரீ பாஞ்ச சன்யாழ்வானிருக்கப் பிறிதொரு சங்கும் தெரிதருங்கமுகும் சரியென முன்வரச் சரிதரும் பொலிவினையுடைய திருக்கண்டத்தழகும்:—

கங. திருமுகம்:—கூம்பிய ஆம்பலும் சோம்பற மேம்படத், தெளிவிட்ட ஒளிவட்டஞ்சூழ்ந்து, தறையிருள் நீக்கும் நிறைகதிர் மதியும், கறையுண்டு கரும்பாம்பாற் குறையுண்டு, சிறிது நாள்வளர்வுண்டு சிறிதுநாள் தளர்வுண்டு நின்றமையாலே தாழ்ச்சி யெய்த மாட்சியெய்தி, அப்பொழுதலர்ந்த அரவிந்தத்தையும் எப்படி யொக்குமென்றெவருமிசைக்க நிவர்ந்து, எதிர்வுறுவாரை மயலில் இருத்தும் பேரருள் பொழியுந் திருமுகவழகும்:—

கச. திருச்செவி:—அலைவுறும் புலமனம் நிலைபெறும் வலையெனச் சுருண்டுருண்டு நீண்டு மநோகரமாய், விதிசிவாதிய ரெவரும் துதிகொளாதி மறையொரு நான்கும் உணர்தற்கரிய உணர்வெனும் பெரும்பதப் பொருளைப் பேரறிவைந்தையும் ஓரறிவாக்கி யுணர்ந்துகொண்ட பெருமிதத் திருச்செவியழகும்:—

கரு. திருவாய்:—சிருண்ட நீருண்டு நிவந்து நிவந்தாலும், பன்னுலகனைத்தையும் தன்னகப்படுத்தும் மன்னமுதூறும் இன்னுரையியம்பும் பேராற்றலும், சரிசெயுந்தந்த வரிசை யோடந்த வெள்ளென வெளுத்த ஒள்ளிய திருமுறுவலும் தான் எய்தப் பெருமையால் மாமலரான தாமரையே தலைநாணுமாயின் நிவரும் பவளமோ நேரெனப் போரிட வல்லதென்று பொலிந்து நின்ற திருவாயினழகும்:—

கசா. புன்னகை:—அண்டிவரும் தொண்டக் குழாங்களை யன்புடனேக்கும் ஆனந்த விளைவால், அர்ச்சாவதார நிலையை யதிக்ரமித்து விம்மி வெளிவிழும் அவ்யக்த மதுர மந்தஹாசத்தினழகும்:—

கஎ. திருக்கபோலம்:—துளங்கும் பளிங்குமண் டலங்க ளிரண்டைத் துகளறக்கடைந்து துலக்கித் துடைத்துச் சேர்த்து வைத்தது போல் பளபளென் றொளிரும் திருக்கபோலவழகும்:—

கஅ திருமூக்கு:—பண்பொடு தொங்கும் சண்பக மலரென, முனைமலர்ந்துயர்ந்து அடிமிக ஒடுங்கி உபயதுவார சோபிதமாய் நிலவி, இந்த்ர நீலக்கொழுந்தையும் மரகதச் சோதியையும் புறக்கணி! நிறத்ததோ இது வெனக்கருதி, ப்ராந்தி யேந்தி ஒந்தியானது இந்த்ர கோபத்தின்மேல் தாவி மேவி நீண்டுவந்து நிமிர்ந்திருக்கிற தோற்றத்தையும் மாற்றதக்க ஏற்றம் பெற்ற கோலநீள் கொடிமூக்கினழகும்:—

ககூ. திருப்புருவம்:—குன்றெடுத்தாயர் மாதர் குரவை கொண்டொரு விளாவிற் கன்றெடுத் தெறிந்துவெய்ய காளியற் கிருதாள்

நல்கிய கோவலர் சேவகனார் நன்றெடுத்த வைதேகியார்தம் மன்றெடுத் தொடித்தவில்லும், வழியில் நின்றெடுத் தொசித்த வில்லும், கம்ஸன் விழாவிற் சென்றெடுத் திறுத்தவில்லும், சதுரர்கள் புகழும் விதுரன்கைவில்லும், கனஞ் செறிந்துள்ள தனஞ்சயன் வில்லும், பெருவலி பெற்ற வுருவிலி வில்லும் புல்லெனச் சொல்லும் வல்லமை யார்ந்து, அல்லொக்கும் நிறத்தவளாது வயிரக்குன்றக் கல்லொக்கும் நெஞ்சிற்றங்கா தப்புறங் கழன்று கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயதும், வைதவைவின் மராமரமேழ்தொளை யெய்தச் செய்ததும், மற்றும் பற்பல கொற்ற வசடைரை முற்றுஞ் செற்றுயர் வெற்றியுற்றதும், வெள்ளெருக்க மலர்முடியான் வெற்பெடுத்த திரடோளின் மேலுங்கீழும், எள்ளிருக்கு மிடனின்றி யுயிரிருக்கு மிடநாடி யிழைத்தவாறே வெனும்படி, கள்ளிருக்கு மலர்க் கூந்தற் சானகியைக் கடுஞ்சிறையில் வைத்த காதலானது இராவணனுடைய உள்ளிருக்கு மெனக்கருதி அவன் உடற்பிளந்து தடவியதுமான சுடுசரங் கொண்ட நெடிய கோதண்டத்தை யொன்றி நின்ற திருப்புருவத்தழகும்:

உ௰. திருநெற்றி:—மறுவும் வெருவும், பொலிவும் நலிவும், பிறப்பும் இறப்பும் இன்றிக்கே என்றும் ஒரு தன்மையதாய் நிலவெறிக்கும் இஷ்டமிக்குதவும் அஷ்டமிப்பிறை யொன்றிருந்தா லதனைப் பொருந்தாநின்று “குலந்தருஞ் செல்வந் தந்திடுமடியார் படுதுயராயின வெல்லாம், நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநில மளிக்கும், வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற தாயினு மாயினசெய்யும், நலந்தருஞ் சொல்” லாகிய, ஆழியா னளவினுமம், நெய்சுடர் விளக்கிற் றோன்றப் பெற்று விளங்கும் திருநெற்றியழகும்:—

உக. திருமுடி:—“நீண்டுகுழன்று நெய்திரண்டு நெறிந்து செறிந்து நெடுநீலம் பூண்டுபுரிந்து சரிந்து கடை சுருண்டு புனையும் நறும் பூவும் வேண்டுமல்லவெனத் தெய்வ வெறியே கமழுந்” திருச்சிகையொடு பொன்னுமணியும் பொலிந்தோங்கி மின்னிமலர்ந்துயர்ந்த திருமுடியழகும்:—

சம்பூர்ணமாக அறிந்தேத்த “வென்றியேவேண்டி வீழ்பொருட்கிரங்கி வேற்கணார் கலவியே கருதி, நின்றவா நில்லா நெஞ்சினையுடைய அடியோங்கள் அறியோம் அறியோம். தேவரீர் நித்யமான இச்சௌந்தர்யத்துடன் நீடூழி வாழ்ந்திடுக வாழ்ந்திடுகவே:—

ஜய விஜயீபவ.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

85594



# ஸ்ரீ பரகாலரந்தாதி.

## காப்பு.

சுவையார்ந்த சொல்லுந் துகடீர் பொருளுந் தொடைநடையுஞ்
சவையார் மகிழ வமைத்தொரந் தாதி சதுர்க்கவிமன்
செவையார் பரகால வித்தகற் கோதவென் சிந்தைநிற்பாய்
குவையார்ந்த கீர்த்தி யிராமாநு ஜாவிதென் கோரிக்கையே. க

வான்பிடிக் கும்பொருள் வையம் பிடித்துய்ய வாசமிகும்
தேன்பிடிக் கும்பொழி லங்குரு கூரெனுந் தெய்வப்பதி
தான்பிடிக் குஞ்சட கோபர் சரோருகத் தாள்பரவி
நான்பிடிக் கும்பர காலரந் தாதியை நாட்டுவனே. உ

வேங்கடங் கொண்டவ ரேவருள் ளத்தும் விளங்கியன்னோர்
தாங்கடங் கட்கு நலந்தேட நன்றருள் தாயகனும்
வேங்கட வாபர காலரந் தாதி விளம்ப வென்றன்
தீங்கட நாவிருந் தாதரிப் பாய்சுவை தேங்கிடவே. ௩

நம்பொற்கு லாரியர் கோனெதி ராசர் நயந்தளித்த
அம்பொற்கு மாரரெம் மான்பெமான் சந்ததி யாய்ப்பாடிவாழ்
எம்பொற்கு லாரியர் வேங்கடா சாரியர் இன்னிசையார்
தம்பொற் கமல மலர்த்தா ளெனது தலைக்கொள்வனே. ௪

ஓப்பா ரிவர்க்கிலை யென்றோத வோத வுவர்க்கடல்சூழ்
இப்பாரி னெய்திநன் மால்சம யத்துள வேற்றமுற்றும்
துப்பார வோதித் துணைபுரிந் தெம்மைத் துலங்கவைத்த
அப்பா ரியர்த மரவிந்தத் தாளெம் மகவிளக்கே. ௫

## நூல்.

திருமங்கை நாதன் திருப்புகழ் நாளுஞ்சிந் தித்திருந்து
தருமங்கை யாள்வீ ரெனும்போ தனைதனைச் சாற்றுநல்ல
கருமங்கை யேந்துமிக் கோரினம் மைமக்கடைத் தேற்றவந்த
திருமங்கை மன்பர காலன் திருப்பதஞ் சேவிப்பமே. ௧

சேவேறு மீசன் றிருக்கைத் தலத்தினைச் சேர்ந்தவந்தப்
பூவேறு மண்ண றலைத்துயர் போக்கிய புண்ணியன்றாள்
நாவேறு செஞ்சொற் பனுவறந் தேத்துநல் லாடலெனும்
மாவேறு நங்கலி கன்றிப் பிரான்கா ணமக்கரணே. ௨

நற்றிரு மங்கைம ணாலிக் குறையலூர் நற்பதியில்
பற்று கலியொரு முந்நூற்றெட் டிற்பெரும் பாக்கியஞ்சேர்
கற்ற நளவாண்டு கார்த்திகை மாமதிக் கார்த்திகையில்
உற்றனன் சார்ங்காமி சத்துக் குருவி னுலகுய்யவே. ௩

உலகிற் பொருள்சே ரிறைவன் புகழே யுறுதுணைமற்
றிலகுந் துணைவே றிலையிஃ துணரா திகல்புரியுங்
கலகத் திறங்க ளிழிவென் றனன்பர காலன்முந்தை
அலகின் மறையி னறுதியைக் கண்டுளத் தன்புகொண்டே. ௪

அன்பின் பரிசறி விப்பான் புவிக்க ணவதரித்த
இன்புரு வாய குருகூ ரெதீச ரிசைமறையாம்
என்டு முருகுமவ் வின்றமிழ்க் காறங்க மேயவருள்
அன்பா வெழிலாலி யண்ணு லடியேனை யாதரியே. ௫

ஆதரங் கூர வரைக்கண மேனு மமர்ந்துநின்னை
மாதரங் கஞ்சூழ் தராதலத் தெண்ணிலன் மாசுடையேன்
மாதரங் கண்வலைப் பட்டுழல் வேனெனை மன்னித்தருள்
சீதரற் கேற்ற திருவுடை யாய்மங்கைத் தேசிகனே. ௬

தேவர்கள் போற்றுந் திருவரங் கேசர் திருத்தளிக்கிங்
காவன வெல்லா மமைத்திசை வாய்ந்தநின் னாள்வினைதான்
ஏவருக் குண்டெ னிழுக்கொழித் தாண்மங்கை யேத்தவந்த
வேத னேநினை யேநம்பி னேனருள் செய்வள்ளலே. ௭

வள்ளற் றமிழும் வளந்திகழ் பண்ணும் வளர்மறையும்
மள்ளற் புவியு மகிழ்வான் றலமு மணம்பெற்றன
விள்ளற் கரிய பெரும்புக ழான்மங்கை வேந்தருளும்
உள்ளற் கினிய மொழியா யிரமிங் குதித்தபின்னே. அ

பின்னை மணாளனை வாள்வலி காட்டிப் பிறங்குநலம்
தன்னை யடைந்த தயாநிதி யேயித் தராதலத்தில்
உன்னை நினைக்கு முபாய முருவகை யோங்கநின்றே
என்னை வருத்துங் கொடும்பிணி யைச்சிறி தீர்த்தருளே. ௯

ஈரொளி யேமு னிருந்தன மூன்று யிலகினவால்
வேரொளி ருஞ்சன னத்தரு வீழ்த்தி விளங்கினசீர்
காரொளி செய்பொழின் மங்கை வரோதயன் கண்டளித்த
பேரொளி யாய பெரிய திருமொழிப் பேறுற்றதே. ௰

பேயிருக் கும்பெரு வெள்ளம்விண் மீது பெருகியபோ
தாயிருக் கும்வித மாதரித் தானைவிட் டன்னியர்பாற்
போயிருப் பீர்மங்கை நாதன் புகன்றதைப் போற்றகில்லீர்
தாயிருக் குங்கான் மணிவெனீ ராட்டுத றக்கதன்றே. ௧௧

தத்துவச் செம்பொரு ளாயுந் தருமந் தனைக்கையுற்றீர்
ஒத்தமெய்ஞ் ஞான முடையீ ருடனே யுலகுரைக்கும்
வித்தக னலிப் பதியான் குறையலூர் மேவிடுவீர்
சித்தங் களிக்கச் சிறந்திடு வீரொரு தீதின்றியே. ௧௨

தீவினை யேனைத் திருத்தித் திருக்கறச் சிந்தை வந்து
மேவினை யாயின் மிளிர்ந்திடு வேன்மெச்சும் வித்தகஞ்சேர்
காவினை யேந்துந் திருவாலி யுற்றவென் காவலவா
நீவிசை மாவூர்ந்து வாராய் மனத்துயர் நீங்கிடவே. ௧௩

நீர்மே னடப்பா னிழலி லொதுங்குவா னேர்ந்தவர்பால்
தார்மேவு நல்லதோ ராவழக் கன்றிருத் தாளூதுவான்
ஊர்மேவு சாயை பிடிப்பா னுயரநின் றேதொங்குவான்
ஏர்மே வியவிந்த நால்வரைத் தோடுணை யேற்றனையே. ௧௪

ஏற்ற முறுந்திரு நாதன் றிருவடி யெண்ணிவெறும்
மாற்ற முறும்பா கியமதத் தும்பியின் மத்தகத்தை
வீற்ற முறப்பிளக் குஞ்சிங்க மாகுமுன் வீரந்தனில்
தேற்ற முறவருண் மாரியாந் தெய்வ செகாதிபனே. கரு

செப்புங் குமுத வலிநங்கை மேவுஞ் செழுங்கரும்பே
தப்பும் வழியின்றி வெந்துயர் வாரியிற் றத்தளித்திங்
கப்பும் விழிகள்பே ராறுய்ப் பெருக வழுதழுது
துப்பு மிழந்தலை கின்றேன் றுணைபுரி தூமணியே. கசா

புரிகின்ற பால்வாய்ப் பிறைச்சேய் மருங்கிற் பொருந்தவந்தி
வருகின்ற மேற்றிசை மாதழும் வேளைநம் மங்கையர்கோன்
அரியொன்று தொங்கற் கவாவுறு வார்கட் கமைந்தவெல்லாம்
தெரிப்பா னிதோர்பனி வாடை புகுந்து சிவண்கின்றதே. கஎ

சிவணிய தீவினை தீட்டிய நாளிவை சேர்ந்தெமையிப்
புவனியிற் சன்மப் புழுதியி னூற்றிட்டுப் போக்கிடுமோ
பவனியிற் காழிப் பதியானை வென்றநின் பைஞ்சொற்களாம்
அவனிற் பெரிய திருமொழி தேர்ந்தபே ரன்பரையே. கஅ

அனலைப் பிளந்தோர் மதிக்கொழுந் தாக்கிய தன்றியன்றிற்
பனையைப் பிளவார் துனியைப் பிளக்கும்பைந் தார்பயவார்
இனலைத் தருவெம் பவக்கிழி யைப்பிளந் தின்பளிக்கப்
புனலை யுடைய குறையலூர் போந்தருள் புண்ணியரே. ககூ

புலஞ்சேர் கழிமுகப் பொன்மங்கை யாளன் புகன்றவின்ப
நலஞ்சேர் திருமொழி யாற்றிரு மாலை நமதுகரத்
தலஞ்சேர் கனியிற் றரநா மவன்று டலைவைத்திலம்
வலஞ்சேர்ந் தினிது வணங்கில நன்றி மறந்தனமே. உ0

மறந்தும் புறம்பணி யாத திருமங்கை மன்குலத்திற்
பிறந்தும் வயிற்றுப் பிணிக்கே திரிந்து பிறர்க்கடிமைத்
திறந்தும் பியில்விழை கின்றேமெவ் வாறினிச் சீர்பயின்று
சிறந்தும் புகழி லிருந்தும் விளங்குவஞ் செப்புமினே. உக

செப்ப முணராத தீயர் பொருளைத் திரைக்கடனீர்
உப்பென்று மாமுகி லுண்டுநன் னீர்செய் துயிர்களுக்கிங்
கெப்படி தந்து பயன்பெறு மப்படி யேயடைந்து
நற்படி நல்கிப் பயனளித் தான்மங்கை நாயகனே. உஉ

நாயக னாய்நின்று நந்தகோ பன்ற னகர்புரந்த
தாயகன் பொன்னடி யின்னே தழீஇச்சுகஞ் சாருமென்றான்
தீயக வேள்வி தினமும் வளர்க்குந் திருவாலிநாட்
டேயவன் தூயவன் வாட்கலி கன்றி யெமதிறையே. உந

இறையி னிலையு முயிரி னிலையு மியறடையாங்
குறையி னிலையு நெறியி னிலையுங் குறிபயனும்
நிறையி னிலையும் பரகாலர் சொன்ன நெறியின்படி
மறையி னிலைபொரு டேரி னமது மயலறுமே. உச

மயலின் குணமுணர் காலம் பெறுதவிம் மான்விழியாள்
செயல்பிறி தொன்றும் புரிகில ளாலித் திருநகரான்
பெயரே யிராப்பகல் பேசுகின் றாளென்சொல் பேணகில்லாள்
நயனே விதுமங்கை வேந்தற் கிணைநிகர் நங்கையரே. உரு

நறைசேர் பசுந்துள பத்திரு மார்பர் நளினவடி
நிறைசேர் மனத்தி லிருத்திய மங்கைம னீளலங்கல்
பிறைசேர் நுதற்கின்று நல்கிலர் நைந்துளம் பித்தாயினள்
கறைசே ரொளிர்வாட் பரகாலர்க் கீது கழறுமினே. உசா

காஞ்சிரஞ் சேர்த்துக் கடும்பூச லிட்டுக் கடலுலகைத்
திரம்பெறு சொல்லா லுய் வித்ததும் பொய்யென்று செப்புதுமோ
வரம்பெறு நற்குறை யற்பதி போய்வசை யாடுதுமோ
தரம்பெறுப் பைதலை நேரற வேட்டேற்றுந் தஞ்சனையே. உஎ

தகுமறை யாயிரத் திற்கு மலங்காரந் தண்டமிழ்க்கு
நிகரறு பாயிர நூற்கெலாந் தாய்நிகழ் நாற்கவிக்குத்
திகழ்படிச் சந்தந் திசைக்கருந் தீபந் திருமங்கைமன்
மகிழுறும் வண்ணந் திருவாய் மலர்ந்தருள் வான்கவியே. உஅ

வாசக் குழலாள் குமுதவல் லிப்பெயர் மாதரசி
நேசத் துடனிழல் போல்வாழ் வதுகண்டு நிற்குங்கொலோ
பாசத் தொடுமீளுங் கொல்லோ பரகாலன் பற்றிவிடும்
தேசுற் றொளிர்கொக்கின் பின்சென்ற நெஞ்சங் திடத்துடனே. ௨௯

திருமடப் பள்ளி திருநட மாளிகை திண்சிகரம்
பொருவறு மாலிநா டன்றிரு மண்டபம் பொன்மதில்கள்
தருநிக ரஞ்சு களஞ்சியங் கொட்டாரஞ் சார்பணிகள்
பெருமித மங்கைமன் செய்தா னரங்கர்க்குப் பெட்புடனே. ௩௰

பெட்பி னிரும்பூ தலத்திற் பிறியா திருந்தெனது
தெட்ப முறத்தொல் வினைவே ரறுத்தாதி தேவினையே
நட்பிற் பணியவைத் தான்பர கால னமன்றமர்கள்
கொட்பென் றனையென் குயிற்ற முடியுங் குவலயத்தே. ௩௧

குறும்பொரு மூன்றுங் கெடுத்தனை மெய்த்தொண்டர் கூட்டத்திலே
நறும்புக ழெய்த விணங்கவைத் தானலி நன்னகரான்
மறந்திகழ் வாட்கலி கன்றி யருண்மாரி மங்கையர்கோன்
அறங்குல வுங்கழற் போதிரண் டும்மென் னகத்தனவே. ௩௨

அகத்தை வருத்தும் புறவிருண் மாற்றி யருளினல்ல
சுகத்தை யளித்த பிரான்மங்கை வேந்தன் றுணைப்பதங்கள்
இகத்தும் பரத்து மிதயாலபத்தி லிருத்தியைவர்
புகுத்தும் கொடுஞ்செய லிற்புகு தாமற் பொருந்துவனே. ௩௩

பொற்பார் கதிபடை வான்கா ளைடுகற் புணரியுமே
நற்பார் மதிக்கக் கொதிக்கத் தவஞ்செயு நாட்டமற்றேன்
அற்பா னுலகை யாதரிப் பான்வந்த வாத்தன்மங்கை
சொற்பா வலர்பெரு மானெனக் குந்துணை யாயினனே. ௩௪

துனியா ரிடும்பைகள் முந்தினு மின்பந் துதைந்திடினும்
கனியா ருளங்கடன் மல்லை நின்றானைக் கழல்வணங்கும்
இனியானை நற்றமிழ் மாலைசெய் நீலனை யெண்ணனுற்றார்.
வினையா யினவனைத் துங்கெடும் ஒண்மை விளைவுறுமே. ௩௫

விளைந்தெழுங் கீர்த்தி விளங்க வியலிசை மேவவின்ப
மளைந்த சதுர்க்கவி தந்தபி ரானருண் மாரியென்னை
வளைந்த வினைத்தொகை யாவு மினிவருந் தாதவண்ணங்
களைந்தருள் செய்தா னவன்கழ லானுங் கழறுவனே. ௩௬

கதிக்கந்த மார்க்கமோ விம்மார்க்க மோவென்று காசினியில்
விதிக்கும்ப னூல்கற் றுழன்றிடு வீர்மங்கை வேந்தனின்ப
முதிர்க்கும் படியுரை நன்மொழி தேர்ந்தும்ப ரும்பணிந்து
துதிக்கும் பதம்பெற்று நீங்கா மகிழ்க்கட ரேயுமினே. ௩௭

தோகைய ரன்னங் கிளிவண் டெனக்குத் தூதிருந்தும்
வாகையு ரேமென்றெ னெஞ்சந் தனைநம்பி மங்கையர்கோன்
ஆகத் தணிமாலைக் காகவி டஃதவ னுரெழிலிற்
சோகித் தெனையுந் தனையு மறந்து தயக்குற்றதே. ௩௮

துயக்கமில் ஞானத் தவரையு நன்கு துயக்கவல்ல
மயக்குடை மாயன் மலரடி வாழ்த்தி மயலறுத்த
வியக்குறு நம்பர காலன் விரைகமழ் வீரக்கழல்
நயக்குறு மன்பர்க் கிலைபிற வித்துயர் நானிலத்தே. ௩௯

நால்வகை வேத நவிலேந்து வேள்வி நயந்துசெயும்
மேல்வகை வானவ ரின்மிக்க வேதியர் மேவியுறை
சேல்வய லாலித் திருநகர்ச் செல்வன் றிருப்பதங்கள்
போல்வரு நந்தம் பிறவிப் பிணிக்குப் புகலிலையே. ௪௰

புயல்கா ளுரையீர் புனலாலி நாடன் புனிதமுறும்
வியன்மேனி யொத்திடும் யோகங்க ணீங்கள் விழைந்தடைந்த
செயலுன்னைகம் மாறுக வாது செழும்பார் திருத்தவன்போல்
இயன்மாரி பெய்துல கத்தைவாழ் விக்க விசைந்ததுமே. ௪௧

இசையார் சகத்திர மாமுடி யங்கை யினிதலர்த்தி
மிசையா யிரஞ்சிர நாகங் கவிப்ப விசும்பவிர்பங்
கசமா மெனவா யிரங்கண் வளரரங் கத்தெம்பிராற்
கிசைவான் பணிக ளிழைத்தனன் மங்கைக் கிறையினிதே. ௪௨

இந்திரற் குந்திரி யம்பகற் குங்கஞ்ச வேந்தனுக்கும்
முந்திய வாழ்வி லிருந்தின்ப வாரிதி மூழ்குவரால்
வெந்திறல் வாட்கலி கன்றி விருப்பின் விளம்பியநற்
செந்தமிழ் வேதமொ ராயிர முங்கற்ற சேதனரே. ௨௩

சேடேறு செண்பகஞ் செய்ய செருந்தி செழுங்கமுகம்
ஏடேறு தாமரை நன்மணம் வீசு மெழிற்பொழிலூ
டாடேறு மாவய லாலைப் புகைகம ழாலிநகர்
ஈடேற வந்த பரகால னெங்கட் கியல்கதியே. ௨௪

இயலு மிசையு மியையக் கவிக ளீந்த வெம்மோய்
குயினின் றுளிர்பொழில் சூழுங் குறையற் குலப்பதியோய்
வெயில்வாட் கலிகன்றி வேந்தே யடியேன் வினையகற்றிச்
செயலுங் குணமுஞ் செவையுற வேயருள் செய்துவையே. ௨௫

சென்று சினவிடை யேழும் வலிகெடச் செற்றுப்பினர்
மன்றற் குழலிநப் பின்னை தடந்தோண் மருவுமெந்தை
வென்றித் திறனை விளக்கிய மங்கையர் வித்தகனே
என்றன் றுயரொழித் தின்ப மளிக்க வியைந்தருளே. ௨௬

இலைகா யருந்தி யிருங்கான மெய்தி யெழிற்கதிக்கே
அலைசூழ் புவியை வலம்வந் தனலிடை யேயமர்ந்து
நிலையின்றி யோடித் திரிவீர் பரகால னேசமிக்கான்
மலைவின்றி யன்னவன் றாளடைந் தாற்சுகம் வாய்த்திடுமே. ௨௭

வாயினிரங்கி வயங்காரம் வீசி வளைசொரிந்து
பாயலை யுந்தியம் மாலை யடைந்து பகர்புவிக்கண்
ஏயனந் தல்விட்டு நின்றனை யென்போ லெழிற்கலிபன்
நேயமிகுந்து வருந்தினை கொல்லோ நெடுங்கடலே. ௨௮

கதியாங் கடவுளுங் காத்த குருவுங் களித்தளித்த
துதியார்ந்த வன்னையு மப்பனுஞ் சூழ்தரு சுற்றமுமென்
நிதியாக வந்தெனை யாளுங் கலிகன்றி நீலனல்லால்
விதியார் விதிவினைக் கானவ ரோமெய்ம்மை வித்தகரே. ௨௯

விளங்கூச லூர்சக டொண்வட மென்னவென் மெய்யொடுயிர்
உளங்கூச ஞெள்குதல் கண்டும் பராமுக முற்றிருத்தல்
துளங்கூக்க மாருன் கருணைக்கு மாண்போ சுகம்விளைக்கும்
வளங்கூரு மங்கைக் கதிபா வெனக்கு வழுத்துவையே. ருo

வழுத்தவிர் மெய்யடி யார்மகிழ்ந் துட்கொளு மாமதுரம்
பழுத்தவிர் முக்கனி சர்க்கரை கற்கண்டு பாலமுதம்
முழுத்திய பைந்தமிழ் வேத முதவிய மூதறிஞன்
விழுத்தவன் மங்கையர் வேந்த னெனைக்கை விடானினியே. ருக

விரவிய தேசும் வியன்பொறை யோடு விழுப்புகழும்
பரவிய ஞானமுந் திண்மையும் வெற்றிப் படைக்கலமும்
திரவிய மும்பெரு குந்தா ரணியைத் திருத்தவந்த
உரவிய னூர்திரு மங்கையர் கோன்றுணை யுற்றவர்க்கே. ருஉ

உலகை வருத்துங் கொடுங்கலி யாட்சிக் கொடுங்கிரித்தம்
அலகை யெனத்திரிந் தல்லற் கடற்கு ளழுந்துமென்னை
இலகைக் கியநின் னடியரினத்து ளெய்தவன்பர்
திலக திருமங்கை நாயக செய்யரு டொழித்தே. ருங

தீதறச் சிந்தையிற் றூய்மையும் வாயினிற் செம்மொழியும்
ஆதரித் தேயறி யேன்பாவி யாகி யருந்துயரில்
வேதனை யார்ந்தனன் வேங்கட நாதனை மேவித்தொழும்
போத வெழிற்பர கால வெனையும் புரந்தருளே. ருச

புதல்வரும் பூங்குழ லாரும் புவியும் பொருளுமென்றே
நுதலி யிளைக்கு நமக்குநெஞ் சேகதி நோக்கினெவர்
உதவுவ ரின்றே கலிகன்றி யொண்கழ லுற்றிறைஞ்சின்
பதவியுண் டாமுய்ய நன்கவன் சீர்த்தி பரவுவமே. ருரு

பற்றுக பற்றிலன் பற்றினை யென்னும் பணியதனை
நற்றுணை யாக நமக்கு விளக்கிய நான்மறையுங்
கற்றவ னுலிக் கடிநக ரான்கலி கன்றிமலர்ப்
பொற்றிருப் பாத மிதபாம் புபத்திற் பொருத்துவமே. ருசா

பொற்புறு முத்தமி ழும்மறை நான்கும் புகழறத்தின்
வற்புறு மார்க்கங்கண் முற்றுந் தெரிந்தவன் வாட்கலியன்
அற்புத நாற்கவி யாளனன் னுமை மறிந்துகல்லார்
நற்பத மெய்தா ரொருவார் பிறவி நடலையுமே. ௫௭

நலனறு நீச மதங்க ளொழிந்தன நாரணனை
வலனுறக் காட்டுஞ் சுருதி மகிழ்ந்தது மங்கையர்கோன்
பொலனுறு செந்தமிழ் வேதம் பொலிவுறப் பூவுலகில்
பலனுறு மெய்யடி யார்கள் செழித்துப் பரவினரே. ௫௮

பவக்கட னீந்திப் பராங்கதி பெற்றுயும் பாக்கியமாந்
தவக்கட லிற்றிளைக் காமற் சகத்திற் சலனமுறும்
அவத்தொழின் மேற்கொண் டலையுநெஞ் சேயருள் மாரியம்பொன்
நிவக்கழ லென்னும் புணையை யடைய நினைகுவையே. ௫௯

நிலவுல கிற்பிறக் கும்வேலை நீங்கில நீலனென்னும்
நலனம ராலிநன் னுடன் கலிகன்றி நாந்தகக்கைத்
தலனரு ளொண்டமிழ் தங்கு மனமிலந் தாபமின்றி
வலனுற வாழ்வதெவ் வண்ண மனமே வகுத்துரையே. ௬0

வங்கக்கடலை மதித்தமு தத்தை வரர்க்குகந்து
பங்கிட் டருளும் பரமற் கினிய பராங்குசற்குத்
துங்க விழாவொ டவன்றரு வேதந் துலங்கவைத்த
மங்கைக் கரசே வடியேன் மனப்புன்கண் மாற்றுவையே. ௬௧

மான்விழி மைக்குழல் வாணுதல் வேய்த்தோண் மதிவதனத்
தேன்மொழி யார்மய லிற்சிக்கி வீழ்பொரு டேடியந்தோ
நோன்மை கெடப்பல ரேசநின் றேன்மங்கை நோற்கவந்த
கோன்மைய னேயடை யார்சிய மேநற் குணும்புதியே. ௬௨

குணநலங் கொண்டார் குறைகழ னேடன் குவலயத்திற்
பணநலங் கொண்டோர்க் கடிமையா யோர்நற் பபனுமுரு
வணநலங் குன்றி வருந்தியுன் றண்மலர் வந்தடைந்தேன்
மணநலஞ் சேர்பொழின் மங்கைமன் னுநல் வழியருளே. ௬௩

வசுந்தரை மீதடி யேன்பால் வரவுநல் வார்த்தைசொல்லிப்
பசுந்திருப் பாதமென் சென்னியிற் சூட்டிக்கண் பார்த்துமனங்
கசிந்துரை விண்ணப்பங் கேட்டருள் செய்யவுங் காதலிப்பாய்
வசந்தமுள் ளிச்செழுந் தார்வயங் கும்புய மாதவனே. ௬௪

மாதவத் தாற்பெற்ற வென்மக ணின்முள்ளி மாமலர்த்தார்க்
கேதவஞ் செய்துட லெய்த்துளாள் வேறுபெ ணெங்கட்கிலை
நீதயை கூர்ந்தருள் செய்வாய் விரைந்து நெடும்புகழ்சேர்
ஏதமில் மங்கையர் வாட்கலிகன்றி யெனுந்துரையே. ௬௫

எங்க ளரங்கர்க்குத் தொண்ட ரடிப்பொடி யேந்தல்கொண்ட
தூங்க மதிற்பணி யின்குறை தீர்த்தவன் துய்தருள்பெற்
றங்க ணெடும்புவிக் கின்னருள் செய்த வருந்தவனே
மங்கையர் கோனே யருண்மாரி யேயுனை வாழ்த்துவனே. ௬௬

வாயுன்னை யல்லால் வழுத்தாதுன் றாளே வணங்குந்தலை
ஆயுன் றிருப்புக ழேசெவி கேட்குங்க ணார்ந்துனையே
நேயங் கொளக்காணும் வண்டறை மாநீர் நெடியமங்கைத்
தூயவ நானிக மத்தமிழ் தந்த சுபாகரனே. ௬௭

சுகானந்த மாய்நெடி யோற்கே யுயிர்க டொழும்பென்றுணர்
விகாதமில் ஞானந்த னலம் பொறிவாசல் வேய்ந்தவன்றாள்
மகாரி னடைந்திரு பற்றின் றிருத்தலே மாதவங்காண்
தகாது பிறிதென் றனன்மங்கை வேந்தன் றராதலத்தே. ௬௮

தனங்கொண்ட பான்மணம் வாய்நீங்கிற் றில்லையத் தார்குழலோ
வனங்கொண்ட வென்கரத் தின்னணை யேயினும் வர்த்திப்பதும்
மினுங்குந்த மங்கைமன் கண்டவூ ரெல்லாம் விலைகொளுமக்
கனங்கொண்ட வாள்விழி யாள்சென்ற தெங்ஙன் கடுஞ்சுரமே. ௬௯

ககனத் திருவிட மோவட வேங்கடக் கல்லிடமோ
புகனற் கமலத் தடவிட மோபணிப் பொன்னிடமோ
சுகமிக் குறுகுறை யற்பதி யாமங்கைத் தோன்றல்வந்த
உகப்பா ரிடமோ விடங்காவி னின்ற வொருவருக்கே. ௭௦

ஒருவழி நில்லா துழலு மனந்தனை யோர்ந்தடக்கிப்
பொருவறு மங்கையர் கோன்பர காலன்றன் பொற்பதத்தை
மருவுற வைப்பி னிகத்தும் பரத்து மகிழ்வுறலாம்
கருவரு மார்க்க நமைத்தொட ராது கடந்திடுமே. எக

கதிதரு மட்டாக் கரமந் திரத்தைக் கண்டுகொண்டு
மதிதருந் தூய நலத்தை யடைந்து மயர்வொழிந்தத்
துதியுறும் பேற்றை நமக்கறி வித்தான் சுகந்தழைத்து
வதிதர வாட்கலி கன்றி குறையலூர் மன்னவனே. எஉ

மன்னிய வேம்பின் புழுவேம் பினைவிட்டு மற்றருந்தா
துன்னிய நாயே னுனதுதா ளன்றிவே றொன்றுகவேன்
துன்னிய வென்சோர் வறவருள் வாய்நற் சுடரறிவே
மின்னிய வேல்வல வாபரகால விசாரதனே. எங

விதித்த வுருவார் பிறவியி லின்னும் வியனுலகில்
உதித்து ஞெகிழென் றனையெங்கு நீக்குதி யோவெனயான்
மதித்து வெருவி யிருபா டெரிகொள்ளி வைகெறும்பிற்
பதைத்து ளுருகா நின்றனன் பார்மங்கை பார்த்திபனே. எச

பாழ்த்த பிறவியி லின்னு மெனையெங்கு பாரிடத்தே
வீழ்த்தி விடுவையோ வென்று மருண்டு வியாளத்துடன்
காழ்த்த வொருகூ ரையின்கண் பயிலவே கட்டுணல்போல்
வாழ்த்து பரகால வாடுமென் வாட்டத்தை மாற்றுவையே. எரு

மாற்ற முளவா கினுஞ்சொல்லு வன்மக்கள் மாநிலத்தில்
தோற்றக் குழிதோற்று விப்பாய்கொ லென்றுளந் தொல்லையுற்றே
ஆற்றங் கரைவாழ் மரம்போ லடியனு னஞ்சுகின்றேன்
தேற்றி யருள்வா யருண்மாரி யாமெங்க டேசிகனே. எசு

தேற்ற முடைய திருவாலி மைந்த சிதாநந்தனே
சீற்ற முளவா கினுஞ்செப்பு வன்மக்க டிண்புவியில்
தோற்றக் குழிதோற்று விப்பாய்கொ லென்றஞ்சித்தொல்கடலில்
காற்றத் திடைசேர் கலவர் மனம்போற் கலங்குவனே. எஎ

கள்ளர் மரபி லுதித்துமெய்ஞ் ஞானங் கடைப்பிடித்தோய்
கொள்ளக் குறையா விடும்பைக் குழியிற் குமைய நெஞ்சம்
தள்ளிப் புகப்பெய்தி கொல்லென் றதற்கஞ்சித் தத்தளித்து
வெள்ளத்திடைசேர் நரியினம் போன்று விதிர்த்தனனே. ௭௮

விடையேழ் தழுவும் விமலற் கினியநல் வித்தகனே
மடைநின் றலரும் வயலாலி மைந்தமா மங்கையன்பா
இடைய னெறிந்த மரமொத்திராம லெனையணுகி
அடைய வருள்புரி வாயுன் னருடா னவிர்தரவே. ௭௯

அவிரும் புரவியுந் தேரொடு காலா லணியமைந்த
சிவிகையுஞ் சேனைத் தொகையு முளபெருந் திண்ணியனே
அவியை நிகர்த்தவின் சங்கத் தமிழின்ற னற்புதமார்
கவிக ளொருநான்கு நல்குங் கலிகன்றி காத்தருளே. ௮0

காத்தற்குத் தானே கருதா திருப்பினுங் காதன்மிகப்
பூத்துன் றனையே நினைந்துநை வேற்கொரு பூங்கணையான்
காத்திரங் கொண்டு வலிசெய்ய வெங்ஙன் கழித்திருப்பேன்
கோத்தமுள் ளிக்கொழுங் கண்ணியம் மங்கையர் கோமகனே. ௮௧

கோதற்ற பண்ணும் பரதமுங் கல்வியுங் கோக்கவியும்
ஓதற் கடியே னுறும்போ தெளிதி னுதவவருள்
தாதுற்ற முள்ளியந் தாராடு மார்ப தயாநிதியாய்
வாதற் றெழுதா மறையைத் தமிழ்செய்த வண்மையனே. ௮௨

வண்ணப் புவியொடு வானும் புனலும் வளிகனலும்
எண்ணு மெழுத்துமெக் காலத்து மாறு திறைஞ்சுமன்பர்
கண்ணுங் கருத்துங் களிக்க வரும்பர காலவருள்
பண்ணுஞ் செயலும் பழகுங் குணமும் பயனுறவே. ௮௩

பண்ணின் மொழியார் பையநடமின் படரடைந்து
கண்ணுஞ் சுழன்றிழி பீளையு மீளையுங் கண்டிரென்று
துண்ணென வேசுமுன் றுக்கச் சுழலை துணிப்பதற்கு
விண்ணும் பரவுநம் மங்கையர் வேந்துரை மெய்க்கொண்மினே. ௮௪

மெய்மை யிழந்து விரிகுழ லார்வலை மேவியென்றும்
பொய்மை புகன்று புரைபல செய்திவண் புன்மையுற்றேன்
நொய்மை கெடக்கடைக் கண்பார்த் தருளுண்மை நூற்பயன்றோ
ஐமை முகிற்றங்கு மம்பொழின் மங்கைக் கதிபதியே. ௮௫

அன்னைக் கலமுத் தனையைக் குனிகோ னனையைத்தரும்
அன்னைக்கு மல்லவே மன்னனைக் கன்றி யடுத்தளித்த
பின்னனைக் கும்முத வாப்புளா லெய்தினன் பீழையந்தோ
துன்னிடர் தீர்த்தருண் மங்கைவ ரோதய சோபிதனே. ௮௬

சோதனை செய்வது நீதமன் றென்றன் றுரிசொழிய
வாதரங் கூரன்னை யிற்புரந் தாள்வ தழகுகண்டாய்
பூதலத் தேயரண் புக்கவர் தம்மைப் புறக்கணித்தால்
சூதனெவ் வாருய்கு வேன்பர காலநீ சொல்லுவையே. ௮௭

சொல்லிய மேம்பொருள் செல்லவிட் டுண்மை துணிந்துணர்ந்து
நல்லிய லாம்பரி சோர்ந்துகொண் டைம்புல னன்கடக்க
வல்லவர் போற்றும் பரகால விவ்வேளை வந்தெனது
புல்லறி வேக வருள்வா யொருவரம் புங்கவனே. ௮௮

புகலுந் திறங்கொண்டு நின்கழற் குத்தொண்டு புக்கியற்றும்
பகரஞ் சிறிதுமில் லாக்கொடி யேனெனைப் பார்ப்பவரார்
திகழுங் கருணைக் கடலா நினையன்றிச் சீர்மையென்றும்
மிகுநற் றிருமங்கை வேந்தே யிணையறு வித்தகனே. ௮௯

விறல்சேர்ந்த சித்தசித் தோடீச னென்று விளம்புறும்
மிறல்சேர்ந்த தத்துவ மூன்றின் முடிபை விழைந்துணர்ந்த
திறல்சேர்ந்த மெய்த்தொண்டர் சிந்தையி னுளுந் திகழுமெங்கள்
அறல்சேர்ந்த நீர்மங்கை வேந்தே யெனையுநன் காண்டருளே. ௯௦

அம்பர மூடறுத் தோங்கி யுலகை யளந்தபிரான்
செம்பத மாமலர் சென்னியி லேந்துந் திருத்தொண்டரே
பம்பரம் போற்சுழ லும்பிறப் பின்பெரும் பற்றறுப்பர்
நம்புமி னென்ற பரகால னங்கட்கு ஞானவைப்பே. ௯௧

ஞாலந் தனினங்கை மீர்நீவிர் பெண்பெற்று நல்கினிர்யான்
சீலம் பெறப்பெற்ற வேழைமைய யென்சொல்வன் சித்தமொத்துக்
கோலம் பெறுதிரு வாளென்றும் வேலென்றுங் கோதகன்ற
வாலம் பெறுமாடன் மாவென்றும் வாய்விட்டு வாழத்துவளே. ௯௨

வாழ்ந்தார்க ளேவர்கொன் முற்றும் வழுவின்றி வையகத்தில்
சூழ்ந்தாலி நாடன்றன் றொல்சீர் புகழ்ந்தவன் றாமலர்த்தாள்
தாழ்ந்தாவி யாகம் பொருடந்து நாளுந் தனியன்பினில்
ஆழ்ந்தார்க ளன்றி யறைமி னடுவிழ வாதறிந்தே. ௯௩

அறியாது பாலக னாய்ப்பல தீமைக ளாதரித்தேன்
நெறியாது மின்றிப் பெரியவ னாயபி னீணிலத்திற்
குறியாம லேபிறர்க் கேயுழைத் தேழையாய்க் குன்றிநின்றேன்
வெறியார்ந்த முள்ளியந் தண்டார்ப் பரகால விண்ணவனே. ௯௪

விண்ணார் சிகரத் திருவாலி நாட வினைவயத்தேன்
மண்ணாய்ப் புனலெரி காலொடு மஞ்சுலாம் வானகமாம்
புண்ணா ருடலிற் புலம்பிநன் கெய்த்துப் புலர்ந்தொழிந்தேன்
அண்ணா வளித்தரு ணின்னை யடைந்தே னரணெனவே. ௯௫

அருளகத் தில்லாத புல்லரைப் பாடி யலுத்துவந்த
தெருளறி வாள ருளக்கொதிப் பிற்கொதி செம்புலத்தை
மருள்விழி மானே கடந்துவிட் டோமிதோ வான்றழுவும்
பொருள்செறி நற்றிரு வாலி யெனும்பதி போந்தனமே. ௯௬

போதத் திருமங்கை வேந்தே நினது புகழ்க்கடலிற்
றீதற் றடியேன் றிளைத்துய்யு மாறு திருவருள்செய்
வேதப் பொருளை வியன்றென் மொழியில் விரித்தவனே
காதற் குமுதவல் லிக்குகப் பாங்கரும் பேகனியே. ௯௭

கலங்கா மனங்கொடு நின்னையெந் நாளுங் கருத்திருத்தி
நலங்காண நாயேற்கும் வாய்க்கு மொருதிரு நாளுமுண்டோ
துலங்காத தீநெறி யாளரைச் செற்றருள் சுந்தரனே
வலங்காணும் வாட்படை மங்கைமன் னாவெங்கள் வான்கதியே. ௯௮

வாரிரு ளாயவை யத்தை வயங்கவைக் கும்மிரவி
யோர்பொரு ளாகப் பரந்தது தான்பொது வுற்றதுபோல்
தேரறி வாளனெம் மங்கையர் கோனருள் சேர்ந்தபின்னோர்
ஏர்பர னுண்டென் றெலாச்சம யங்களு மின்புற்றவே. ௯௯

இருந்தமி ழாரணங் கீர்வாண வேத மெழுத்தெட்டெனும்
பெருந்திரு மந்திர மைம்படை யும்பர் பிறங்கறவோர்
அருந்திரு நாதனோ டாழ்வார்கள் மண்வி ணருண்மாரியாய்
வருந்திரு மங்கைமன் வாழ்கவென் றும்பெற்று வண்டிருவே. ௧00

முற்றுப் பெற்றது.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

Q22-417
N27

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீ பரகாலரந்தாதி

# அரும்பத விளக்கம்.

### காப்புச் செய்யுள்.

க. சுவை - இன்பம், இனிமை; ஆர்-நிறைந்த

துகள் - குற்றம்; தீர்-அற்ற

சதுர்க்கவிமன் - நான்கு கவிகளிலும் வல்ல திருமங்கையாழ்வார் - (ஆசு, மதுரம், சித்திரம், விஸ்தாரம் என்பன நாலு கவிகள்.

செவை - (செவ்வை) செம்மை.

குவை - கூட்டம்.

உ. வான்-வானவர் (நித்திய சூரிகள்) ஆகுபெயர். தேன்-வண்டு

ங. வேங்கடம் கொண்டவர் - வெவ்விய கடமாகிய தேகத்தைக் கொண்டவர்கள்.

தாயகன் - கடவுள், சர்வமுந் தந்தவன்.

தீங்கு அட - தீவினைகள் நீங்க.

ச. ஓத உவர் கடல் - அலைகளையுடைய உப்புத்தன்மை பொருந்திய சமுத்திரம்.

துப்பு ஆர - தெளிவுபெற; அறிவு விளங்க.

## நூல்.

க. திருமங்கை நாதன் - ஸ்ரீய: பதி, பகவான்.
தருமம் கை ஆள்வீர் - ஐயமும் பிச்சையும் ஆந்தனையுங் கைகாட்டி வாழும் சேதனரே.
நல்ல கருமம் - சத்காரியம்.

உ. சே - ரிஷபம்; ஏறு - வாகனமாக ஊர்ந்து செல்லும்.
அந்த பூ ஏறும் அண்ணல் - பகவானது உந்தியாகிய தாமரையினின்றும் போந்த பிரமன்.
பனுவல் தந்து - பாமாலை சூடி.
ஆடல் எனும் மா - ஆடன்மா; திருமங்கையாழ்வாருடைய குதிரை.
அரண் - அடைக்கலம்.

ந. கற்ற - பழகிய; தெரிந்த
குருவின் - வியாழக்கிழமையில்

ச. உறுதுணை - தக்க ஆதரவு
இகல் - போர், வாதம்
முந்தை - பழமையான, அலகு இல் - கணக்கில்லாத, பல
அறுதி - முடிவு.

ரு. பரிசு - தன்மை.
எதி ஈசர் - (உலகப் பற்று முற்றுந்) துறந்த தலைவர்.
ஏய - பொருந்த

சூ. ஆதரம் - அன்பு.
மா தரங்கம் - பெரிய கடல்
மாதர் அம்கண் - பெண்களின் அழகிய கண்

எ. தளி - கோயில்
இசை - கீர்த்தி
வாய்ந்த - கொண்ட
ஆள்வினை - முயற்சி
எவருக்கு - பிறரெவருக்கு; இழுக்கு - குற்றம்

வள்ளல் - வளமை.
பண் - கீதம்.
மள்ளல் - வளமை, செழுமை.
வான் தலம் - பரமபதம்
உள்ளற்கு - நினைத்தற்கு

௯. பிறங்கு - விளங்கும்
ஈர்த்து அருள் - ஒழித்தருள்.

௧௰. ஈர் ஒளி - இரு ஒளி, சூரிய சந்திரர்.
வேர் ஒளிரும் - வேரூன்றிய
சனனம் தரு - பிறவியாகிய மரம்
பெரிய திருமொழிப்பேறு - பெரிய திருமொழி என்னும் பிரபந்தமாகிய பொக்கிஷம்

௧௧. பே - நுரை.
ஆய் - தாய்

௧௨. தத்துவம் - உண்மை; வேதாந்தம்.

௧௩. திருக்கு - குற்றம்.
மிளிர்ந்திடுவேன் - ஈடேறுவேன், பிரகாசிப்பேன்.
வித்தகம் - ஞானம்
கா - சோலை; மா - குதிரை (ஆடன்மா)

௧௪. தார் - மாலை.
தோள்துணை - பக்க சகாயம்.

௧௫. வெறும் மாற்றம் - பயனில்லாத சொல்
தும்பி - ஆனை; வீற்றம் - விளக்கம்
தேற்றம் - தெளிவு

௧௬. குமுதவலி - குமுதவல்லி என்னும் பெயருடைய நாயகி
வாரி - கடல்
அப்பு - நீர்.
துப்பு - அறிவு

கஎ. புரிகின்ற - விரும்புகின்ற
பிறைசேய் - இளஞ்சந்திரன்
மருங்கு - இடை
அந்தி - மாலைப்போது; சாயங்காலம்
அரி - வண்டு; ஒன்று - பொருந்திய
தொங்கல் - மாலை
அவா - ஆசை.
தெரிப்பான் - விளக்க
சிவண்கின்றது - சமீபிக்கின்றது

கஅ. சிவணிய - அடைந்த; நெருங்கிய
தீட்டிய - எழுதிய (தலைவிதி)
சன்ம புழுதி - பிறவியாகிய வயல்நிலம்
நாற்று இட்டு - நாற்று நட்டு
போக்கிடுமோ - அழித்துவிடுமோ (கெடுத்துவிடுமோ)
காழி - சீர்காழி; பதியான் - சம்பந்தர்.

கசு. அனல் - தீ (விரகாக்கினி)
மதி கொழுந்து - இளஞ்சந்திரன்.
அன்றில் பனை - அன்றில் பட்சி வாழும் பனைமரம்.
துனி - மனவேதனை.
பயவார் - தரமாட்டார்; இன்னல் - துன்பம்
வெம் - கொடிய; பவம் கிழி - பிறவியாகிய கட்டு.

உ௦. புலம் - வயல்; கழி முகம் - நீர்க் கால்வாயையுடைய
கரம் தலம் சேர் கனி இல் - உள்ளங்கை நெல்லிக்கனி
யைப்போல

உக. புறம் பணியாத - பரதேவரை வணங்காத.
திறம் - திறத்தை.
தும்பியில் - வண்டைப்போல
விழைதல் - விரும்புதல்.

உஉ. செப்பம் - நடுநிலைமை, செம்மை.
திரை - அலை.

உ௩. இன்னே - இப்பொழுதே
தீ அக வேள்வி - அக்கினியைக்கொண்ட யாகம்
ஏயவன் - வந்தவர்.

உ௪. இறை - பகவான்; நிலை - தன்மை (பரமாத்மாவின் தன்மை)
இயல்தடை - பொருந்திய மயக்கம் (அசித்து)
நெறி - உபாயம்.
மறையின் நிலை - வேதநிலை

உ௫. மயல் - காமவிச்சை
பேணல் - ஆதரித்தல்.
நயனோ - நியாயமோ ?

உ௬. நறை - தேன்; நளினம் - தாமரை.
நிறை - கலங்காநிலை; அலங்கல் - மாலை.
கறை - இரத்தக்கறை.

உ௭. கடும் பூசல் - கொடிய சண்டை
வசை ஆடுதல் - பழி கூறுதல்
பைதலை - இளம் பெண்ணை
ஏடு ஏற்றல் - மடலூரச் செய்தல்
தஞ்சன் - சகாயன்

உ௮. நிகர் - ஒப்பு

உ௯. கொக்கு - குதிரை

௩0. பெட்பு - அன்பு

௩௧. இரும் - பெரிய
தெட்பம் - தெளிவு
கொட்பு - சூழ்ச்சி
குயிற்றல் - செய்தல்

௩௨. குறும்பு ஒரு மூன்று - குலம், கல்வி, தனம் என்னும்
இம் மூன்றால் வரும் செருக்கு
நறும் - நல்ல
மறம் - வலிமை

௩௩. இதய ஆலயம் - ஹ்ருதய மாகிற இடம்
புகுதாமல் - சேராமல்

௩௪. பொற்பு - அழகு; கான் - காடு; கல் - மலை
புணரி கடல்; நாட்டம் - எண்ணம்
அற்பு - அன்பு; ஆத்தன் - துணைவன் (பரோபகாரி)

௩௫. துனி - வருத்தம்; இடும்பை - பிறவிப்பிணி
துதைதல் - நெருங்கல்.
கனியார் - மனத்தளர்வு அல்லது உற்சாகம் அடையார்
ஒண்மை - நேர்மை

௩௬. அளைந்த - சேர்ந்த (கலந்த)

௩௭. கதி - பரகதி, முத்தி
விதிக்கும் - உண்டாகிய; பல் நூல்கள் - பல சாஸ்திரங்கள்.
தோய்தல் - மூழ்கல்.

௩௮. வாகை - வெற்றி
ஆகம் - மார்பு
விட அஃது - (விடஃது என நின்றது) - தூதுவிட
அந்த நெஞ்சம்
துயக்கு - மயக்கம்.

௩௯. வியக்குறும் - மெச்சும்
விரை கமழ் - வாசனை வீசுகின்ற
நயக்குறும் - விரும்பும்

௪0. இனம் - கூட்டம்
புகல் - அடைக்கலம்

௪௧. புயல் - மேகம்.
வியன் - அழகிய
விழைந்து - விரும்பி
கைம்மாறு - பிரதிபலன்
உகவாது - விரும்பாமல்
இயல் - பொருந்திய

௪உ. சகத்திரம் - ஆயிரம்
விசும்பு அவிழ் - ஆகாயத்தில் பூத்த
பங்கசம் - தாமரை
பணி - கைங்கரியம்

௪௩. திரியம்பகன் - சிவன்
கஞ்ச ஏந்தல் - பிரமன்
வாரிதி - கடல்
திறல் - வல்லமை

௪௪. சேடு - இளமை
பொழில் ஊடு - சோலைகளின் இடையில்

௪௫. இயைய - பொருந்த
எம்மோய் - எங்கட்குத் தாய் போன்றவரே
வெயில் - ஒளி
செயல் - செய்கை.

௪௬. மன்றல் - வாசனை
இயைந்தருள் - இசைவாய்.

௪௭. அலை - கடல்.
அனல் - அக்கினி (பஞ்சாக்கினி)
மலைவு - மயக்கம்.

௪அ. வயங்கு - பிரகாசிக்கும்
ஆரம் - முத்து; வளை - சங்கு.
உந்தி - தள்ளி
அனந்தல் - நித்திரை.

௪அ. இது கடலுக்கும் நாயகிக்குஞ் சிலேடை. கடலைப்பார்த்து நாயகியானவள் " கடலே திருமங்கை மன்னன் விஷயமாய் அன்பு மேலிட்டு என்னைப்போல் நீயும் வருந்தினைபோலும், நான் வாய்விட்டுப் புலம்பியது போல் நீயும் ஓவென்கிற கோஷம் இடுகிறாய், நான் முத்துமாலையை அகற்றியதுபோல் நீயும் முத்துக்களை வெளியே எறிகிறாய், நான் எனது கைவளையலை இழந்ததுபோல் நீயும் சங்கினங்

களைச் சொரிகிறாய், நான் பாயலை (படுக்கையை) நிராகரித்தது போல் நீயும் பாயலை (பாயும் அலைகளை) வீசுகிறாய்; நான் மாலை (மயக்கத்தை) அடைந்தது போல் நீயும் மாலை (பகவானை) யுன்னிடம் கொண்டிருக்கிறாய். நான் அனந்தல் (நித்திரையை) விட்டதுபோல் நீயும் இரவு பகல் ஓயாமல் நித்திரையின்றிக் கதறுகிறாய்'' - என்பதாம்.

சகூ. விதியார் - பிரமன்.

ருய. ஊசல் - உஞ்சல்; சகடு - சக்கரம்; வடம் - கயிறு
கூ.ச - நாண; ஞெள்குதல் - வருந்துதல்
ஊக்கம் - உற்சாகம்

ருக. வழு - குற்றம், தவிர் - நீங்கிய
அவிர் - விளங்கும், மூதறிஞன் - முது அறிஞன் - முதிர்ந்த அறிவுடையவர்.
விழு தவன் - மேலான தவத்தையுடையவர்

ருஉ. விரவிய - கலந்த
தேசு - ஒளி
வியன் - பெரிய
பொறை - பொறுமை
விழு - மேலான
திண்மை - பலம் - வலிமை,
உரம் - ஞானம்
வியன் - பெருமை

ருரு. அலகை - பேய்
அல்லல் - துன்பம்
இலகு - விளங்கும்
ஐக்கியம் - ஒற்றுமைப் பாடு
எய்த - அடைய
திலக - நெற்றித் திலகம் போன்றவரே.

ருச. போத - ஞான முடையவரே.
புரந்தருள் - இரக்ஷித்தருள்.

ருரு. நுதலி - கருதி
இறைஞ்சின் - வணங்கினால்
சிர்த்தி - கீர்த்தி
பரவல் - வாழ்த்தல்

௫௬. பணி - கட்டளை
கடி - காவல்

௫௭. பொற்பு - அழகு
வற்பு - உறுதி
ஒருவார் - நீங்கார்
நடலை - துன்பம்

௫௮. வலன் - வெற்றி
பொலன் - அழகு
பொலிந்தது - சிறந்தது

௫௯. பவம் - பிறப்பு
பராங்கதி - முத்தி
திளைத்தல் - முழுகல்
அவம் - பயனின்மை
சிவம் - மேலான
புணை - தெப்பம்.

௬0. வேலை - தொழில்
நாந்தகம் - வாள்
தாபம் - துன்பம்

௬௧. வங்கம் - மரக்கலம் அல்லது - வெண்மை (பால்)
மதித்தல் - கடைதல்
வரர் - தேவர்
உகந்து - சந்தோஷித்து
துங்கம் - பரிசுத்தம்
விழா - திருவிழா
துலங்க - விளங்க
புன்கண் - துன்பம்
மாற்றல் - நீக்கல்

சூஉ. மை - கருமை; குழல் - கூந்தல்
வாள் நுதல் - வாள்போன்ற நெற்றி
வேய் - மூங்கில்
மதி - சந்திரன்
வதனம் - முகம்
நோன்மை - பெருமை
நோற்க - தவஞ்செய்ய
கோன்மை - தலைமை, பெருமை
குணம்புதி - குணக்கடல்

சூரு. குரை - சப்திக்கும்படியான
கழல் - வீரகண்டையை யணிந்த பாதம்
குன்றி - குறைந்து (இழந்து)
மணம் - பரிமளம்

சூச. வசுந்தரை - பூமி
வசந்த - பரிமளமுள்ள
வயங்கும் - விளங்கும்

சூரு. எய்த்தல் - இளைத்தல்

சூசூ. ஏந்தல் - பெரியார் (ஆழ்வார்)
துங்கமதில் - தூய்மையாகிய மதிள் (பிராகாரம்)
பணி - கைங்கரியம் ; துய்து - சுத்தம்

சூஎ. ஆய் - ஆராயும்படியான
நால் நிகமம் - நான்கு வேதம்
சுபாகரன் - சுபத்தை யுடையவர்

சூஅ. தொழும்பு - அடிமை
விகாதம் - வேற்றுமை
வேய்தல் - மூடல், அடைத்தல்
மகாரின் - பிள்ளைகளைப் போல

௬௯. தனம் - கொங்கை - (முலை)
வனம் - அழகு
வர்த்தித்தல் - வளர்தல்
குந்தம் - வேல்
சுரம் - பாலைவனம்.

௭௦. ககனம் - ஆகாயம் (வானுலகு)
கல் - மலை
புகல் - சொல்லும்படியான
கமலம் - தாமரை; தடம் - விசாலம்
பணி - பாம்பு (பணிப்பொன் இடம் - நாகலோகம்)
உகப்பு - விருப்பு
கா - சோலை

௭௧. ஓர்ந்து - அறிந்து
பொருவறு - ஒப்பற்ற
மருவுற - தழுவ
கரு - கர்ப்பம்

௭௨. கதி - மோக்ஷம்; அட்டாக்கரம்-அஷ்டாக்ஷரம் (திருமந்திரம்)
மதி - அறிவு, மயர்வு - மயக்கம்
வதிதர - வாழ

௭௩. மன்னிய - நிலையாகவாழும்
உன்னிய - நினைத்த
உகவேன் - விரும்பேன்
துன்னிய - நெருங்கிய
விசாரதன் - ஞானவான்

௭௪. ஞெகிழ் - அலையும் (வருந்தும்)
வெருவி - பயந்து

இருபாடு எரி கொள்ளி வைகும் எறும்பில் - இரண்டு பக்கமும் எரியும்படியான கொள்ளிக் கட்டையின் மத்தியில் தங்கிய எறும்பைப்போல; பார்த்திபன்-தலைவன்

எரு. பார்த்த - பாழான   பாரிடம் - பூமி
வீழ்த்தல் - தள்ளல்   மருண்டு - மயங்கி
வியாளம் - புலி   காழ்த்த - வைரம்பொருந்திய
ஒருகூரை - ஒரேகூண்டில்   பயில - வாழ

எசு. மாற்றம் - சொல்
தொல்லை - துன்பம்
தேசிகன் - தலைவன்

எஎ. தேற்றம் - தெளிவு;சிதாநந்தன் - ஞானநந்தன்
சீற்றம் - கோபம்
கலவர் - கப்பலோட்டிகள் (மாலுமியர்)

எஅ. இடும்பை - துன்பம்
குமைய - வருந்த
விதிர்த்தல் - நடுங்கல்

எகூ. விடை - ரிஷபம்
மடை - நீர்பாயும் இடம்
அலரும் - மலரும்
அவிர்தர - விளங்க

அ0. அவிரும் - விளங்கும்   புரவி - குதிரை
அணி - அழகு   சிவிகை - பல்லக்கு
அவி - தேவாமிர்தம்

அக. பூம்கணையான் - மன்மதன்
காத்திரம் - க்ஷாத்திரம் (வைராக்கியம்)
கமித்தல் - பொறுத்தல்
கண்ணி - மாலை

௮௨. கோது - குற்றம்
பண் - கீதம்
பரதம் - நிர்த்தம்
கோ - சிறந்த கவி - பாடல்
உன்னும்போது - நினைக்கும்போது
தாது - மகரந்தப்பொடி

௮௩. வண்ணம் - அழகு
வளி - காற்று
கனல் - அக்கினி

௮௪. படர் - துன்பம்
ஈளை - கோழை
திண்என - திடுக்கென்று
சுழலை - சூழ்ச்சி
துணித்தல் - நீக்கல்

௮௫. புரை - குற்றம்; புன்மை - இழிவு
ஐய - அழகிய ; மை - கருத்த; முகில் - மேகம்

௮௬. அன்னைக்கு அல்ல - தாய்க்காக அல்ல
முத்து அன்னை - கரும்பு; குனி - வளைக்கும்
கோன் - மன்மதன் (இவன் அன்னை இலக்ஷ்மி)
இலக்ஷ்மியைத்தரும் அன்னை - கடல்
மன் அன்னை - சாசுவதமான தாய்
அடுத்தளித்தபின் அணைக்கும் - அடுத்துக் காத்த
பிற்பட்டதாயான (காகத்திற்கும்)
இதற்கும் உதவாத பட்சி - குயில் - இந்தக் குயிலால்
பீழை - துன்பம்
சோபிதன் - ஒளி பொருந்தியவன்

௮௭. நீதம் - நியாயம்; துரிசு - குற்றம்
ஆதரம் - அன்பு; அன்னையில் - தாயைப்போல
புரத்தல் - ரக்ஷித்தல்; அரண் - அடைக்கலம்
புறக்கணித்தல் - பாராமுகஞ் செய்தல்

௮௮. ஓர்ந்து - அறிந்து

௮௯. பகரம் - விளக்கம்

கூ0. விறல் - வெற்றி திறல் - வல்லமை
மிறல் - வல்லமை அறல் - கருமணல்
விழைந்து - விரும்பி

கூக. அம்பரம் - மேலுலகம்
வைப்பு - புதையல் (நிதி)

கூஉ. கோலம் - அழகு
கோது - குற்றம்
வாலம் - வால்

கூங. ஆவி - உயிர்; ஆகம் - தேகம் (உடல்)
அறைமின் - சொல்லுங்கள்
நடு - நடுவு நிலைமை
இழவாது - நழுவவிடாமல்

கூச. வெறி - வாசனை

கூரு. மஞ்சு - மேகம்; உலாம் - சஞ்சரிக்கும்
எய்த்து - தளர்ந்து; புலர்ந்து - வாடி
அரண் - அடைக்கலம்

கூசா. அகம் - மனம்
புலம் - பாலைவனம்

கூஎ. போதம் - ஞானம்
திளைத்து - மூழ்கி
தென்மொழி - தமிழ்

கூஅ. வலம் - வெற்றி

கூகூ. வார் - நீண்ட

க00. பிறங்கு - விளங்கும்படியான

ஸ்ரீ

# பிழை திருத்தம்.

## வமிசாவளிப் பிரபாவம்.

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| 3 | 21 | வெங் | வேங் |
| 4 | 34 | வெங்கடாசல | வேங்கடாசல |
| 7 | 3 | உப | உபந் |
| 8 | 4 | பெற்றவராய் | பெற்றவராய்ப் |
| 9 | 18 | உபநியா | உபந்நியா |
| 9 | 19 | உபநிய | உபந்நிய |
| 9 | 19 | முதலியாரவர்களை | — |
| 9 | 20, 21 | பை. செட்டியார் அவர்களும் அவருடையகுமாரர் பை. ரங்கைய செட்டியார் அவர்களும் ஸ்ரீ முதலியாண்டான் சுவாமிகளும் | — |
| 9 | 31 | — | இவர் |
| 10 | 2 | — | மற்றும் நமது முதலியார் |
| 10 | 14 | — | நிற்க, |
| 10 | 29 | இரண்டாவதான | இரண்டாவதான மகவு |
| 10 | 31 | மூன்றாவதான | மூன்றாங் குமாரர் |
| 11 | 4 | நான்காவதான | நான்காம் புத்திரர் |
| 11 | 6 | ஐந்தாவதான | ஐந்தாங் குமாரர் |

## திருப்பாதாதி கேசம்.

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| 8 | 2 | நன்றெடுத்த | நன்றெடுக்க, |
| 8 | 33 | ய | ய" |

## நூல்.

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| 10 | 30 | வேக | சேவக |
| 14 | 14 | கெடுத்தனை | கெடுத்தெனை |
| 22 | 4 | நூற்பயன்றோ | நூற்பயன்றோர் |

## அரும்பத விளக்கம்.

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| 25 | 11 | கவிகள். | கவிகள்.) |
| 28 | 11 | — | அவனில் - அவம் இல்லாத (அவம் - பயனின்மை) |
| 51 | 30 | எரிகிறாய் | எறிகிறாய் |

85594

எண்பெருக் கந்நலத்து, ஒண்பொரு ளீறில
வண்புகழ் நாரணன், திண்கழல் சேரே.
அற்றது பற்றெனில், உற்றது வீடுயிர்
செற்றது மன்னுறில், அற்றிறை பற்றே. —

[தமிழாரண உத்தரபாகம்.

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.
அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது.
வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பையில.
தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம். — தமிழாரண பூர்வபாகம்.

ஸ்வதந்தரத்தை நீக்கிக்கொள்வதே
கடவுளின் கிருபையை யடைந்ததாகும்.
நிர்மலமான மனிதன் கடவுளைப் போலாவான்.
ஒன்றை உறுதியாய்ப் பற்றுவதே ஜயத்தின் குறியாம்.
மனத்தின் கொள்கையே சாட்சியாகும்.

உன்னுடைய ஆத்ம யாத்திரையில், பரிசுத்தமும் சாந்தமும் வழிகாட்டுங் கருவிகளாக இருக்க, நீ ஸர்வேஸ்வரனது திருவடிகளுக்கு நிர்மலமாகிய மனமென்னும் பூமாலை சூட்டு.

---

இப்புத்தகம் வேண்டுமவர்கள்:—

N. C. கண்ணபிரான் முதலியார்,
நெ. 24, பாஷ்யகாரலு நாயுடு வீதி,
மின்ட் போஸ்டு ஜி. டி. மதராஸ்.

ஸ்ரீமான், சென்னகேசவுலு நாயுடுகாரு,
ஸ்ரீ நிகேதனம் பிரஸ், தங்கசாலை வீதி;
சௌகார்பேட்டை போஸ்டு, ஜி. டி. மதராஸ்.